**தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 ஜூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 செப்தம்பர் 25 ஆந் திகதி பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கை 1.6 பந்தியில் விவரங்களின் தாக்கங்களினை தவிர்த்து 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நீர்ப்பாசன அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்களின் படி முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் நேரொத்ததாக இருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | இந்த அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு |
|---|---|
| நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளை பதிவு செய்யும் போது 4 சொத்துக் கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 1,321,253,268 தொகை முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகள் மற்றும் இணங்காமை காரணமாக சொத்துக்கள் கணக்கு அந்தத் தொகையினால் மிகையாக காட்டப்பாட்டிருந்தது. | 1.6.1 (அ) ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும்உபகரணங்கள் |

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியை பதிவு செய்யும் போது அலுவலக கட்டிடங்களின் மீதி ரூபா 2,571,665 இனால், போக்குவரத்து உபகரண மீதி ரூபா 48,500,000 இனால், இயந்திர | 2021.12.31 திகதியில் உள்ளவாறு உரிய சொத்து கணக்கு மீதிகள் மற்றும் 2022 நடைமுறை அல்லாத சொத்துக்களின் அசைவு அறிக்கையின் 2022.01.01 திகதியில் உள்ளவாறு | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் மீதிகள் உடன் ஒப்பீட்டு ரீதியாக பரிசோதனை மேற்கொண்டு சரியான |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களும் உபகரணங்களும் மீதி ரூபா 20,406,680 இனால் மற்றும் காணிகள் மீதி ரூபா 1,249,774,923 இனால் என கூட்டுப் பெறுமதி ரூபா 1,321,253,268 தொகை முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுப் பெறுமதி மீதியுடன் மிகையாக காட்டப்பட்டிருந்தது. இங்கு ஆரம்ப மீதிக்கு மேற்கொண்டிருந்த சீராக்கல் மீதான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளிடையான வித்தியாசத்திற்கான காரணம் நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சில் மற்றும் மகாவெளி இராஜாங்க அமைச்சின் 2022 ஆண்டின் போது சொத்துக்களின் கணக்கு மீதிகளை சாட்டுதல் செய்யும் போது, அரச கணக்குத் திணைக்களத்தினால் ஆரம்ப மீதிகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையே. | மீதிகள் உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். ஆரம்ப கணக்கு மீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் தொடர்பாக விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | ஆக்க வளத்தன்மை மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறனை முன்னேற்றும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,706.81 மில்லியனிற்கான கிரயம் ஒன்று மேற்கொண்டிருந்ததுடன், அந்தக் கிரயத்திற்குரிய சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | ஆக்க வளத்தன்மை மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறனை முன்னேற்றும் செயற்திட்டம் 2022.12.31 திகதி உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டமொன்றாகும். இந்த செயற்திட்டத்தின் தாபன அலுவல்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் முறைப் பிரகாரம் செயற்திட்டத்தை செயற்படுத்திய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் பயன்படுத்தப்பட்ட பொருட் பதிவேட்டு விடயங்கள் அமைச்சின் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியங்களின் மூலம் செயற்படுத்தப்படும் செயற்திட்ட அலுவல்கள் முடிவடைந்ததும் கிரயத்திற்குரிய நிதி அல்லாத சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (iii) | திறைசேரி செயலாளரினால் சொத்துக்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக வெளியிட்டிருந்த 2017 ஜூன் 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றிக்கையின் படி சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் செலவு விடய இலக்கம் 2506 – உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது ரூபா 57,064,188,815 தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஆதனங்களை அறுதியாக இனங்கண்டு நிதியல்லாத சொத்துக்கள என கணக்கீடு | அரச கணக்குத் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளில் 2101 முதல் 2105 வரையான செலவுத் தலைப்புகளின் மூலம் உருவாகும் நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், செலவு விடயம் 2506 – உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக 2022 ஆண்டு முதல் கணக்கீட்டுக் கொள்கைகள் | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக திறைசேரிச் செயலாளரினால் 2017 ஜூன் 28 திகதி வெளியிடப்பட்டிருந்த 01/2017 இலக்கம் கொண்ட செத்துக்கள் முகாமைத்து சுற்றறிக்கை மூலம் வழங்கியிருந்த அறிவுரைகளின் படி புதிய நீர்த்தேக்கங்கள் நிர்மாணித்தல், நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களை வலுப்படுத்தல், நீர்ப்பாசன முறைமையினை அபிவிருத்தி செய்தல், |

| | | |
|---|---|---|
| செய்திருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்காக அறிவுரை வழங்கப்பட்டது. | நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நீர்க் காணிகளை அபிவிருத்தி செய்தல், வாகனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்து கொம்டிரோலர் ஜனரல் இற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2023 மே 31 திகதி அளவிலும் பதில் அனுப்பியிருக்காததுடன், அந்த ஐயவினாக்களுக்கு உரிய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 166,008,413,765 தொகையாக காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில் அனுப்பும் போது குறிப்பிட்ட கால வரையறையுள் பதில் அனுப்புவதற்காக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அமைச்சின் கீழ் காணப்படும் பஸ்னாகொட நீர்த்தேக்கச் செயற்திட்டம், மொரகஹகந்த செயற்திட்டம் மற்றும் யான் ஓயா செயற்திட்டத்திற்காக வெளியிடப்பட்டிருந்த நான்கு கணக்காய்வு ஐயவினாக்களுக்கு இதுவரை செயற்திட்ட முகாமைத்துவ அலகு நிறுவப்பட்டு காணப்படாமையால் விளக்கமளித்தல் வழங்கும் போது தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38 ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சுக்காக ரூபா 63,670 மில்லியன் தொகை மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதன் கீழ் ரூபா 45,594 மில்லியன் தொகை | ஏற்றுக்கொள்கின்றேன். நிலவுகின்ற சீரற்ற பொருளாதார நிலைமை மீது திறைசேரியின் திரவத் தண்மையின் படி விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி | கட்டுநிதி திட்டமிடும் போது நடைமுறைச் சாத்திய நிலைமையினை கவனம் செலுத்தி முரண்பாடுகள் |

| | | |
|---|---|---|
| செலவீடு செய்வதற்காக அமைச்சின் மூலம் திட்டமிடப்பட்டு அடிக்கடி ஏற்பாடுகள் விண்ணப்பித்த போதிலும், திறைசேரி ரூபா 10,127 மில்லியன் தொகை மாத்திரம் விடுவித்திருந்தது. அதன்படி, பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களை திட்டமிட்டவாறு நிறைவேற்றிக்கொள்வதற்காக எதிர்வு கூறப்பட்ட கட்டுநிதி தேவைப்பாடுகளின் 16 சதவீதம் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாடுகளுக்கு ஒப்பாக கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்தது. அமைச்சு அனைத்து சந்தர்ப்பங்களிலும் திறைசேரிக்கு வேண்டுதல்கள் சமர்ப்பித்து தேவையான கட்டுநிதித் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | குறைவாக இருக்குமாறு எதிர்வுகூறல் மேற்கொள்ள வேண்டும். |

## 2.2 பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப்பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இன் பந்தி 02(ஈ) பிரகாரம் நிதியாண்டிற்குரிய கொடுப்பனவுகள் அந்த நிதியாண்டிலேயே விடுவிக்க வேண்டியதுடன், ஏதேனும் பொறுப்பொன்று தொடர்ந்து வரும் ஆண்டில் தீர்க்கும் குறிக்கோளுடன் முன்கொண்டு செல்லக்கூடாது என்ற அறிவுரை தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 13 செலவு விடயங்களுக்குரிய ரூபா 1,915,869,976 தொகைக்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | இடைக்கால பாதீட்டு சட்டகத்தினுள் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் எண்ணிக்கைக்கு மிகையாக செல்லாதவாறு பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களின் அத்தியவசியமாக மேற்கொள்ள வேண்டிய விடயங்களுக்காக 2022 ஆண்டின் போது ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. விடுவிப்பதற்கு போதியளவு கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமையால் 2022.12.31 திகதியில் உள்ளவாறு 13 செலவுத் தலைப்புகளுக்குரிய ரூபா 1,915,869,976 இற்கான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் சித்தரித்துக் காட்டப்படுகின்றது. அந்த அனைத்துப் பொறுப்புக்களும் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி பொறுப்புக்களை அணுகக்கூடாத போதிலும், அத்தியவசியம் எனின், திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான நியாயப்படுத்துதல்கள் முறைப் பிரகாரம் கோவைப்படுத்துவதற்கு மற்றும் தொடர் இலக்கத்துடனான பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 255/2017 பிரகாரம், செயற்பட்டிருக்காமை காரணத்தினால் அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறப்புக்கள் கூற்றில் இணைப்பு (iii) இல் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொறுப்புக்கள் மீதி ரூபா | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மீதி மற்றும் அரச கணக்கு திணைக்களத்தின் ஏடுகளின் படி மீதிகளின் வித்தியாசம் ரூபா 30,379,507 தொகை அமைச்சின் பொறுப்புக்கள் பதிவேட்டில் காணப்பட்ட போதிலும் | அரச கணக்கு சுற்றறிக்கை இலக்கம் 255/2017 பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் உள்ளவாறு பொறுப்புக்களை உட்படுத்தி ஸிகாஸ் முறைமை மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டினை |

| | | | |
|---|---|---|---|
| | 1,915,869,976 தொகை எனினும், அரச கணக்குத் திணைக்களத்தின் ஏடுகளின் படி அத்திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 1,885,490,468 தொகையாக காணப்பட்டது. அதன்படி, ரூபா 30,379,508 இற்காக வித்தியாசம் காணப்பட்டது. | அவை அரச கணக்கு திணைக்கள ஏடுகளில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்குகள் தயாரிக்கும் போது அரச கணக்குகள் திணைக்களத்திற்கு இந்த தரவுகள் அனுப்பப்பட்ட போதிலும், இந்த சீராக்கல்கள் தரவு முறைமைக்கு உட்படுத்துவதற்கு முன்னர் உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் பிரதான அணைக்கட்டு நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மின் உற்பத்தி இயந்திரங்கள் நான்கு பொருத்தும் போது 10,937,960 அமெரிக்க டொலர்களுக்கான முரண் கொடுப்பனவு தொடர்பாக 2016 நவம்பர் 29 திகதி அமப16/2513/704/067 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பிரதான அணைக்கட்டு மற்றும் அதன் மின்சார முறைமை நீர்ப்பாசன அமைச்சின் மூலம் நிருவகித்து இலங்கை அரசாங்கம் சார்பாக மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியிருந்ததுடன், உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்து கிடைக்கும் பணத்தின் மூலம் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடனினை திருப்பி செலுத்த வேண்டும். அவ்வாறாயினும், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தினை விற்பனை செய்வதற்காக உடன்படிக்கை ஒன்றுக்கு அணுகியோ அல்லது குறிப்பிட்ட கடன் தொகையை செலுத்தும் பொறுப்பு கணக்கு படிவம் (iii) ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் வருடங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பேன். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு ஈடுபாட்டுப் பொறுப்பினை ஒன்றென வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை விற்பனை செய்வதற்காக இல்ஙகை மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்றுக்கு அணுக வேண்டும். |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப் பகுதிகளில் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 1.6.1(ஆ) பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கியிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்படுகின்ற கணக்காய்வு ஐயவினாக்களுக்காக வழங்கியிருந்த கால வரையறையுள் பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அமைச்சின் கீழ் காணப்படும் சிக்கலான பல்கரும செயற்திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப ரீதியாக ஆழமான விடயங்கள் தொடர்பான அவதானிப்புகளுக்காக பதில் அனுப்பும் போது உப அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களுடன் தொடர்புபட்டு தகவல்கள் சமர்ப்பிக்கும் போது கால தாமதம் ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதானையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் | | |
| 2004 ஒக்தோபர் 11 திகதிய 118 இலக்கம் கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் பந்தி 1.1.7 | 434,066 | 5 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படுகின்ற இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி 2023 மே அளவிலும் இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2004 ஆண்டின் போது அமைச்சுக்கள் மாற்றமடைதல் காரணமாக இனங்காணப்படாத கடன் மீதிகள் என இந்த பெறுமதி காணப்பட்டதுடன் இந்த கடனை தீர்ப்பதற்கு பல வருட காலமாக | கடன் மீதிகளை இனங்கண்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | முயற்சி எடுத்த போதிலும் சரியான தகவல் ஒன்று கண்டறிய முடியாமல் இருக்கின்றது. ஆறு பேர்களை கொண்ட குழு ஒன்றின் மூலம் தகவல்களை கண்டறிந்து இந்த கடன் மீதியை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 2.5 வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்தல்

வங்கிக் கணக்குகள் நெறிப்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருட இறுதியில் உள்ளவாறு காசேட்டில் காணப்பட்ட மீதி திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டிருந்த கிவுல்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் தொடர்பாக காசேட்டில் காணப்பட்ட ரூபா 855,849 தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | கிவுல் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்கு தேவையான பணம் விடுவிப்பது மஹாவலி அதிகார சபையினால் பேணப்படும் கணக்கு ஒன்றின் மூலமே ஆகும். அமைச்சினால் வழங்கியிருந்த கட்டுநிதி திறைசேரிக்கு அனுப்பப்படுவதும் இந்த கணக்கு ஊடாகவே ஆகும். அமைச்சு செயற்திட்டத்திற்கு வழங்கியிருந்த கட்டுநிதியில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி திறைசேரிக்கு சரியாக அனுப்பப்பட்டுள்ளது. கணக்குகளில் அத் திகதியில் உள்ளவாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதித் தொகை மஹாவலி அதிகார சபைக்கு சொந்தமானதாகும். | அமைச்சினால் நியதிச் சட்ட நிறுவனங்கள் அல்லது செயற்திட்ட அலுவலகங்களுக்கு விடுவிக்கப்படுகின்ற நிதியம் ஆகக் காணப்படுவதனால் வருட இறுதியில் மீதித் தொகையை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழ் உள்ள கிராமிய வயல்கள் மற்றும் சார்ந்த குளங்கள், நீர்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழான நீர் சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 5,000 கிராமிய குளங்கள் அணைக் கட்டுக்கள், அருவிப் பாதைகள் புனரமைத்தல், திருத்துதல் மற்றும் நவீன மயப்படுத்தலுக்கு திட்டமிடப்பட்டிருந்தது. அங்கு நாட்டின் 25 மாவட்டங்களும் அடங்கக் கூடியவாறு மஹாவலி வலயம் சார்ந்த சிறிய குளங்கள் தவிர ஏனைய அனைத்து 1,340 கிராமிய குளங்கள்/ அணைக் கட்டுக்களை மறுசீரமைப்பதற்காக 13 நிறுவனங்களுக்கு 2021 ஆண்டின் போது ரூபா 4,210.29 மில்லியன் தொகையும் 2022 ஆண்டின் போது ரூபா 2,493 மில்லியன் தொகையுமாக மொத்தம் ரூபா 6,703.29 மில்லியன் தொகையும் ஏற்பாடுகள் பகிரப்பட்டிருந்தது. அவற்றில் 2022 ஆண்டளவில் 1,034 குளங்கள்/ அணைக் கட்டுக்கள் மாத்திரம் பௌதீக முன்னேற்றத்தை பூர்த்தி செய்திருந்ததுடன், நிர்மாண வேலை முன்னேற்றம் 03 சதவீதம் முதல் 75 சதவீதம் வரை இடைப்பட்டதுடன், 133 குளங்கள்/ அணைக் கட்டுக்கள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த வேலைகள் என கணித்து முன்னேற்ற அறிக்கைகளில் உட்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் பூர்த்தி செய்யக் கூடிய செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்து, செயற்திட்ட அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்படி அச் செயற்திட்டங்கள் 100% பௌதீக ரீதியாக வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், பௌதீக ரீதியாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் என கணிக்கப்பட்டுள்ளது. கிராமிய குளங்கள் அபிவிருத்தி மற்றும் உரிய முன்னேற்ற அறிக்கைகள் மாவட்ட மட்டத்தில் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் வழங்கியிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசன அமைச்சின் திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவ்வவ் சந்தர்ப்பங்களில் அமைச்சு மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையாகக் கொண்டே ஆகும். | நூற்றிற்கு 03 முதல் நூற்றிற்கு 75 இற்கு குறைவான முன்னேற்றத்தை உடைய செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் என செயற்திட்ட அறிக்கையில் இருந்து அகற்றப்பட வேண்டும். இந்த பிழையான தகவல்கள் சமர்ப்பித்த உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) பஸ்நாகொட நீர்த்தேக்க செயற்திட்டம்
கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொட ஒன்றித்த நீர்வழங்கள் செற்திட்டதை செயற்படுத்துவதற்காக தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையில் தலைவர் மற்றும் China Machinery Engineering Corporation கம்பனியின் தலைவரிடையே 2013 மே 15 திகதி அணுகியிருந்த ஒப்பந்த உடன்படிக்கையின் படி அமெரிக்க டொலர்கள் 229.5 இற்கான பெறுமதியுடைய மேற்கூறிய செயற்திட்டம் 2014-2017 கால்பகுதியில் செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் அடிப்படை மூலவளமாகிய பஸ்நாகொட நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்துடன் தேசிய நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபை, 2016 மார்ச் 22 மற்றும் 2019 ஜுன் 12 ஆகிய தினங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கை இரண்டிற்கு அணுகியிருந்தது. இந்த செயற்திட்டத்திற்குரிய தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு (TEC) இனால் வழங்கியிருந்த பரிந்துரையின் படி அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த பெறுகைக் குழு (CAPC) இனால் பஸ்நாகொட நீர்த்தேக்கம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை ரூபா 2,347,406,831 இற்கு சீனாவின் சினோஹைட்ரோ (Sinohydro Corporation Limited) கம்பனிக்கு வழங்குவதற்காக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதற்காக

கிடைக்கப்பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது நீர்த்தேக்கம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரினால் மேற்கூறிய கம்பனியுடன் 2019 ஜூன் 13 திகதி ரூபா 2,394,354,968 இற்கான (ரூபா 46,948,137 இற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி உட்பட) பெறுமதியை உடைய பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாணம் (EPC) ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்றினை அணுகியிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இங்கு உத்தியோகத்தர் ஆறுபேர் அடங்கிய தொழிநுட்ப மதிப்பாய்வுச் குழு (TEC) ஒப்பந்த வேலைக்காக குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 2,093 மில்லியனுக்கான விலைகூறல் ரூபா 2,347 மில்லியன் என சரி செய்யப்பட வேண்டுமென கணிக்கப்பட்டிருந்தது. அங்கு பொறியியல் மதிப்பீட்டில் இலக்கம் 5 இன் கீழ் ஆரம்ப வேலைகளுக்காக (Preliminaries) ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த ரூபா 99.689 மில்லியனுக்கான செலவிற்கு ரூபா 254,062,080 இற்கான மேலதிக பெறுமதி ஒன்றினை கூட்டுவதற்கு தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு (TEC) நடவடிக்கை எடுத்திருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த கூறுவிலைகளில் விடய இலக்கம் 4 இன் கீழ் நிறுவுதல், நிர்மாணித்தல் மற்றும் ஏனைய சேவைகள் (Installation/ Construction and other Services) என ரூபா 254,062,080 தொகை

பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 7.9.2 இன் பிரகாரம் விரிவாக விலைகூறலை மதிப்பாய்வு செய்வதற்கு முன்னர் கிடைத்துள்ள விலைகூறல்களை எண் கணிதம் ரீதியாக சரியானதா என பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அங்கு ஏற்பட்டிருந்த தவறின் காரணமாக ஒப்பந்தக்காரரினால் ரூபா 2,093 மில்லியனிற்காக சமர்ப்பித்திருந்த விலைகூறலை ரூபா 2,347 மில்லியன் என திருத்தப்பட்டிருந்தது.

பொறுப்பற்ற முறையில் செயற்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்வதற்காக உரிய நியமன அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும். மேலும், மேலதிக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றின் மூலம் பெறுகை வழிகாட்டல்கள் மீது கவனம் செலுத்தாமல் செயற்பட்டிருந்தமையால் அரசுக்கு ஏற்பட்டிருந்த நட்டம் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(1) ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தினை வலியுறுத்தப்படுத்தும் முகவராண்மை நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்ய வேண்டும்.

காட்டப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு (TEC) விடய இலக்கம் 5 இற்காக பிழையான முறையில் ரூபா 254,062,080 தொகை சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலையை விட ரூபா 254,062,080 தொகை மிகையான ஒப்பந்த வேலையை சாட்டுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மேற்கொண்டிருந்த மேற்கூறிய திருத்தங்களை பொறியியல் பெறுகை மற்றும் நிர்மாணித்தல் ஒப்பந்த வேலை பெறுகை பதிவேட்டில் ஆரம்ப விவரக் குறிப்புகளுக்கு முரணாக காணப்பட்டதுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6.1(அ)(v) பிரிவின் படி விலைகூறல் தாரரிடம் எழுத்துமூல விளக்கமளித்தல் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 254,062,080 தொகையினால் ஒப்பந்த வேலையின் பெறுமதியை அதிகரிப்பதற்கு தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரைத்திருந்தது. அங்கு பெறுகை நிறுவனம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3 இன் கீழ் சாட்டப்பட்டிருந்த பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றியும் இருக்கவில்லை.

(ii) மேற்கூறிய ரூபா 254,062,080 இனால் அதிகரிக்கப்பட்ட பெறுமதிக்கு ஒப்பந்த வேலையை வழங்குதல், அதன் அடிப்படையில் முற்பணம் கணித்து கொடுப்பனவு செய்த காரணத்தினால் ஒப்பந்தக்காரருக்கு 2019 ஆண்டின் போது வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என (Mobilization advance) விலைகூறல்களில் கூறுவிலைகள் சரி செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு நேரிட்டிருந்த தவறின் காரணமாக ஒப்பந்த வேலையின் விலை பிழையான முறையில் ரூபா 2347 மில்லியன் தொகை என கணிக்கப்பட்டிருந்த காரணத்தினால் மேலதிகமாக கூட்டப்பட்டிருந்த ரூபா 254,062,079 இற்காக 20% மிகையாக செலுத்தியிருந்த ரூபா 50,812,416 இற்கான முற்பணத் தொகைக்காக 2019 ஆண்டு முதல் திருப்ப அறவீடு செய்யும் நாள் வரை காலப் பகுதிக்காக வட்டி கணித்து அந்த வட்டியினை ஒப்பந்தக்காரரிடம் அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 50,812,416 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இற்கான அசைவு முற்பணம் என ரூபா 50,812,416 மில்லியன் தொகையொன்று ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரினால் ஒப்பந்தக்காரருடன் 2019 ஜுன் 13 திகதி அணுகியிருந்த ஒப்பந்த உடன்படிக்கையின் iv பகுதியில் உள்ளடங்கிய விஷேட நிபந்தனைகள் (Particular Conditions of Contract) உப பிரிவு 14.4 இன் கீழ் காணப்படும் இடைக்காலக் கொடுப்பனவு சான்றுபடுத்துதல் தொடர்பாக பூர்த்தி செய்ய வேண்டிய பௌதீக முன்னேற்றத்தை நெருங்கியிருக்காத போது நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரை அறிவுறுத்தாமல் மற்றும் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட பெறுகைக்குழு (CAPC) இனால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கையை அங்கீகாரம் இன்றி மாற்றம் செய்து கொடுப்பனவை சான்றுபடுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2020 முதல் 2022 வரை 11 இடைக்காலக் கொடுப்பனவுகள் (Interim Payments) மூலம் ரூபா 401,165,861 தொகை முறையான அதிகாரம் ஒன்றின்றி மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை உரிய பிரிவு தொடர்பாக கவனம் செலுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரிவு 14.4 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்தல், உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த கொடுப்பனவு நேரசூசியின் படி ஒப்பந்த விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தக்காரர் நெருங்கியுள்ள உண்மையான முன்னேற்றம் மற்றும் வேலைத்திட்டம் (Work Breakdown Structure) படி செய்ய வேணடும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த ஒப்பந்த வேலையை செயற்படுத்தும் போது காணிகளை தனதாக்குவதில் தாமதங்கள் மற்றும் பல்வேறு சிக்கல்களின் தாக்கத்தின் காரணமாக ஒப்பந்த வேலைகளின் கருமங்களின் முன்னேற்றம் மிகவும் தாமதமாக காணப்பட்டதுடன், பெற்றுக்கொண்டிருந்த முன்னேற்றம் இடைக்கால கொடுப்பனவு நேரசூசியில் காணப்பட்ட முன்னேற்றத்தை விட குறைவாக இருந்தது. அதன் காரணமாக கொடுப்பனவு நேரசூசியின் படி ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய இடைக்காலக் கொடுப்பனவு மேற்கொள்ளல் தத்துரூபமாக மேற்கொள்ள முடியாதிருந்ததுடன், ஒப்பந்த வேலையின் முன்னேற்றத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒப்பந்த வேலையின் கொடுப்பனவு செய்ய நேரிட்டது. அங்கு சேவை வழங்குனரினால் உடன்படிக்கையின் சாதாரண நிபந்தனைகள் 14.4(b) மற்றும் உப பிரிவுகள் 3.5 இன் பிரகாரம் இடைக்காலக் கொடுப்பனவு | ஒப்பந்த உடன்படிக்கையின் விஷேட நிபந்தனைகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காமல், அமைச்சுச் செயலாளரின் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி ஒப்பந்தக்காரருக்கு அனுகூலமான முறையில் கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>ஒப்பந்த உடன்படிக்கையின் விஷேட நிபந்தனை 14.2 விலைகூறல் பதிவேடுகளிலும் குறிப்பிடப்பட்டிருந்தமையால் மற்றும் விலைகூறல் பதிவேடு அமைச்சரவை பெறுகை குழுவின் அங்கீகாரம் பெற்றிருந்தமையாலும் அந்த விலைகூறல் பதிவேட்டின் விலைகூறலை மதிப்பாய்வு செய்த பின்னர் ஒப்பந்த வேலையை வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருந்தமையால் ஒப்பந்த உடன்படிக்கையின் விஷேட நிபந்தனைகளுக்கு மேலதிகமாக அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று தேவைப்படாது.<br><br>அதன்படி மேற்கொள்ளப்பட்ட இடைக்கால கொடுப்பனவு ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணானவை அல்ல என அறிவிக்கின்றேன். | |
| (iv) | பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாணவேலை (EPC) ஒப்பந்த வேலைகள் தொடர்பாக First Edition 1999 (ISBN2- 8843-0220-9) பொது வழிகாட்டலின் உப பிரிவு 14.2 இன் பிரகாரம் முற்பணங்கள் செலுத்துதல் மற்றும் மீண்டும் அறவீடு செய்தல் மொத்த ஒப்பந்த பெறுமதியில் 30 வீதத்தை பூர்த்தி செய்த பின்னர் மேற்கொள்ளப்படும் என்ற விஷேட நிபந்தனைக்கு நேரொத்ததாக உபபிரிவு 14.4 இல் காணப்படும் கொடுப்பனவு அட்டவணையில் (Schedule of Payment) குறிப்பிட்ட விஷேட நிபந்தனைகள் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் | உடன்படிக்கையின் 14.2 விஷேட நிபந்தனையின் பிரகாரம் முற்பணம் திருப்பி அறவீடு செய்தல் ஒப்பந்த வேலைகளில் முன்னேற்றம் 30 சதவீதம் வரை நெருங்கிய பின்னர் மேற்கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.<br>அதேபோல், விஷேட நிபந்தனை 14.4 இன் படி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளல் ஒப்பந்த வேலையின் உண்மையான முன்னேற்றம் கொடுப்பனவு நேரசூசியும் வேலைத்திட்டமும் மற்றும் ஒப்பந்த வேலையில் பொதுவான நிபந்தனைகள் மீது மேற்கொள்ளப்படுகின்றன என காட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக சேவை வழங்குனரினால் ஒப்பந்த | ஒப்பந்த உடன்படிக்கையின் விஷேட நிபந்தனை தொடர்பாக கவனம் செலுத்தி இருக்காமல் அமைச்சுச் செயலாளரின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஒப்பந்தக்காரருக்கு அனுகூலமான முறையில் கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் 2022 ஒக்தோபர் 31 திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தும் அளவில் பௌதீக செயலாற்றுகை 17.09 சதவீதமாக காணப்பட்ட போதிலும், 2020-2022 காலப்பகுதியில் 11 இடைக்காலக் கொடுப்பனவுகள் மூலம் ரூபா 401,165,861 ஆன தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை பிரிவு 3.5 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பௌதீக செயலாற்றுகை 17.09 தொகை காணப்பட்ட போதிலும், அவற்றில் 16 சதவீதத்திற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீதியான 20 சதவீதம் அசைவு முற்பணமாகும். இந்த அசைவு முற்பணத்திற்காக இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கியொன்றிலிருந்து மொத்த முற்பணத் தொகைக்கு சமமான செல்லுபடியாகும் பொறுப்புச் சான்றிதழ் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| (v) | செயற்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரான China Machinery Engineering Corporation இனால் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் மேலதிக பொது முகாமையாளரை விழித்த இலக்கம் CMEC/ATTANA/20120730/007 மற்றும் 2012 ஜூலை 30 திகதிய கடிதத்தின் மூலம் பிரதான ஒப்பந்த வேலைக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படும் கருமங்களில் (Indirect Works) ஒட்டுமொத்த பொறுப்பு நேரடியாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு சாட்டப்படுவதுடன், உப ஒப்பந்த வேலைக்காரர்களின் கருமங்களை நிறைவேற்றுவதில் தாமதங்களினால் மேற்கொள்வதற்கு நேரிடுகின்ற மேலதிக கிரயம் காரணமாக பிரதான ஒப்பந்தக்காரர்களின் கருமங்களை நிறைவேற்றுவதில் தாமதங்களினால் மேற்கொள்ள நேரிடுகின்ற மேலதிகக் கிரயத்தின் காரணமாக பிரதான ஒப்பந்தக்காரரின் | China Machinery Engineering Corporation உடன் தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையினால் கம்பஹா அத்தனகல்ல, மினுவங்கொட ஒன்றித்த நீர் வழங்கள் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக கையொப்பமிடப்பட்டிருந்த மறைவேலை (Indirect Work) ஒதுக்கப்பட்ட தொகையில் இருந்து பஸ்னாகொட நீர்த்தேக்கம் நிர்மாணிப்பதற்காக நீர் வழங்கள் அமைச்சினால் அது தொடர்பான விஷேட அறிவுடைய நிறுவனங்களில் காணப்படும் நீர்ப்பாசன அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் குறிப்பிட்ட ஒப்பந்த வேலை சீனாவின் சினோஹைட்ரோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலையை செயற்படுத்துதல் மற்றும் நிர்மாண வேலை அலுவல்களின் மேற்பார்வை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சாட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கை யொப்பமிட்டதன் மூலம் | இந்த ஒப்பந்த வேலையை பெற்றுக் கொள்ளும் போது பெறுகை செய்முறை, கொடுப்பனவை சான்றுபடுத்துதல், ஒப்பந்த நிர்வாகம் ஆகிய கருமங்களில் மேலதிக காலமொன்று மேலதிக நிர்வாக கிரயமொன்று மற்றும் முறைசாராமை ஏற்பட்டுள்ளதா என விசாரணை சபை ஒன்று நியமனம் செய்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

கருமங்களுக்கு நேரிடுகின்ற பிரதிகூலமான தாக்கங்கள் தொடர்பாக ஏற்படும் பொறுப்புக்கள் ஏதும் அந்தக் கம்பனிக்கு சாட்டப்படுவதில்லை எனவும், மேற்கூறிய தாமதங்களுக்காக கால நீடிப்பு பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அதற்கான மேலதிக கிரயம் பெற்றுக்கொள்வதற்கு தமது கம்பனிக்கு உரிமை காணப்படுகின்றது எனவும் அறிவித்திருந்தது. செயற்திட்டம் 2017 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அந்தக் காலப் பகுதியில் நீர் மூலவளத்தினை நிர்மாணித்தல் அலுவல்கள் பூர்த்தி செய்தல் நடைமுறை ரீதியாக முடியாமல் இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 2016 மார்ச் 12 திகதி நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவருடன் முதலாவது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு (MOU) அணுகியிருந்தது. அங்கு திணைக்களத்தினால் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் குறிப்பிட்ட உப உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருந்ததுடன், 2019 ஜூன் மாதம் 12 திகதி இரண்டாவது புரிந்துணர்வு உடன்படிக்கையை அணுகும் சந்தர்ப்பத்திலும் பிரதான ஒப்பந்தவேலை உடன்படிக்கையின் காலம் முடிவடைந்திருந்தது. ஒப்பந்தம் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை பிரதான ஒப்பந்தக்காரருக்கு கால நீடிப்பு பெற்றுக்கொள்வதற்கு மற்றும் மேலதிக கிரயமொன்றிற்கான உரிமையொன்று காணப்படல் மற்றும் அதன் பொறுப்பு உப ஒப்பந்தக்காரரான நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இடப்பெயர்வு செய்யும் நீர்ப்பாசன திணைக்களம் பஸ்னாகொட நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக உப ஒப்பந்த வேலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. விடயம் அவ்வாறானதால் பெறுகை அலுவல்களுக்காக மேலதிக காலமொன்று, மேலதிக நிர்வாக கிரயம் ஒன்று மற்றும் முறைசாராமை இங்கு நேரிட்டிருந்தது என காணப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| | இயலுமை ஒன்று காணப்பட்ட போதிலும் அது தொடர்பான நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | **பாரிய/ மத்திய அளவிலான செயற்திட்டங்கள் தொடர்பாக பத்தாண்டுத் திட்டம்.** | | |
| (i) | இந்த பத்தாண்டுத் திட்டத்தின் படி மஹகல்கமுவ குளம் தரமுயர்துதல், கீழ் மல்வதுஓயா நீர்த்தேக்கம் நிர்மாணித்தல், ரிதீமாலியத்த ஒன்றித்த அபிவிருத்தி, கிவுல் ஓயா நீர்த்தேக்கம், கவுடுள்ள இடது கரை பிரதான வாய்கால் தம்சோபுர குளம் வரை நீடித்தல், ரமகென் ஓயா ஒன்றித்த அபிவிருத்தி மற்றும் மஹாவலி பீ வலயம் மாதுருஓயா தென் கரை அபிவிருத்தி ஆகிய 7 செயற்திட்டங்களுக்கான சாத்தியகூறு ஆய்வு பூர்த்தி செய்த பின்னர் 2012-2017 ஆகிய காலவரையுள் செயற்படுத்துவதற்காக தேவையான ஏற்பாடுகள் வழங்குவதற்கும் 2011 செப்தெம்பர் 28 திகதிய இலக்கம் 11/1851/508/034 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த 7 செயற்திட்டங்கள் தொடரட்பாக ரூபா 76.043 மில்லியன் தொகைக்கான மொத்த கிரய மதிப்பீட்டின் கீழ் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,528 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டமேனும் மீளாய்வாண்டு வரை முழுமையாக பூர்த்தி செய்திருக்காததுடன், 3 செயற்திட்டங்களுக்கு உரிய பூர்த்தி செய்தல் சதவீதம் | பதில் அளிக்கப்படவில்லை. | பத்தாண்டுத் திட்டத்தில் உள்ளடங்கிய ஒவ்வொரு செயற்திட்டமும் தாமதம் அடைந்ததற்கான காரணத்தை மற்றும் அந்த தாமதத்தின் மூலம் தேசிய பொருளாதாரம் இழந்துள்ள பங்களிப்பு தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிவிக்க வேண்டும். கீழ் மல்வதுஓயா செயற்திட்டம் தவிர ஏனைய செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்தமையால் அந்த செயற்திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்குரிய இயலுமையை கவனத்தில் எடுத்து அவ்வாறான தாமதங்கள் தவிர்க்கக் கூடிய வகையில் செயற்திட்டங்களை திட்மிட்டு செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளில் 1 இற்கும் 5 சதவீதத்திற்கும் இடையே காணப்பட்டது. மேற்கூறிய செயற்திட்டடத்தை செயற்படுத்துவதன் மூலம் 68,000 ஹெக்டயர்கள் புதிய வயல்களுக்கு நீர்வழங்கள், தற்போது பயிர்செய்யப்படும் காணி 203,000 ஹெக்டயர்களுக்காக சிறு மற்றும் பெரும் போகம் இரண்டிற்கும் நீர் வழங்கள் மற்றும் 200 மெ.வோ. மின்சாரம் உற்பத்தி செய்தல் குறிக்கோளாக காணப்பட்ட போதிலும் அதன் பெறுபேறு தேசிய பொருளாதாரத்திற்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்தின் படி நீர்ப்பாசன துறையின் எதிர்கால அபிவிருத்தி அலுவல்கள் மேற்கூறிய அபிவிருத்தி திட்டத்திற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்ட போதிலும் அந்த திட்டத்தினுள் அடங்கி இருக்காத 2023 பூர்த்தி செய்ய வேண்டிய குடாவிலச்சிய நீர்த்தேக்கம் மறுசீரமைத்தல், 2021 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆக்கவளத் தன்மை மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை வினைத்திறனை முன்னேற்றுதல் (PEISEIP), 2018 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தல்பிடிகல நீர்த்தேக்கம் 2017, ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஜின் நில்வலா திருப்பல், 2022 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தெமடகல்ல குள புனர்நிர்மாணம், 2024 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஹிம்பிலியாகட வத்தேகெதர நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகிய 6 செயற்திட்டங்கள் ரூபா 74,423.4 மில்லியனுக்கான மதிப்பீட்டு | பதில் அளிக்கவில்லை. | அமைச்சின் விடயப் பரப்பிற்குரிய அமைச்சரவையினால் எடுக்கப்படும் அனைத்து கொள்கைசார் தீர்மானங்களும் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உட்படுத்தி முன்னேற்ற மீளாய்வொன்று மேற்கொண்டு இலக்காகிய நாட்களிலேயே பூர்த்தி செய்ய வேண்டும். |

பெறுமதி ஒன்றின் கீழ் 2014 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 6,902.44 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.
மேற்கூறிய செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டமேனும் இதுவரை முழுமையாக பூர்த்தி செய்திருக்காததுடன், 5 செயற்திட்டங்களுக்கு உரிய பூர்த்தி செய்தல் சதவீதம் 0.06 இற்கும் 13.16 இற்கும் இடையே காணப்பட்டது.

**(ஈ) அனுராதபுர மாவட்டத்தில் வெலிஓயா மஹாவலி டு வலயம் ஒன்றித்த அபிவிருத்தி செயற்திட்டம் - கிவுல் ஓயா நீர்த்தேக்கம் நிர்மாணிக்கும் செயற்திட்டம்**

இச் செயற்திட்டத்தின் கீழ் 66 மில்லியன் மீற்றர் கியூப் (MCM) கொள்திறனை உடைய நீர்த்தேக்கம் ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டதுடன் அதன் மூலம் வெலிஓயா பிரதேசத்தில் காணப்படும் 700 ஹெக்டயர் காணிக்காக மற்றும் மாஓயா மற்றும் வெலிஓயா இடைப்பட்ட பிரதேசத்தில் 1,700 ஹெக்டயர் புதிய காணிக்காக நீர்ப்பாசன நீர் வசதிகள் வழங்குதலும், குடிநீர் வழங்குதலும் குறிக்கோள் கொண்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 2012 முதல் 2022 ஆண்டு வரை ரூபா 364.64 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டம் 2012 ஆண்டு முதல் 4 ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய | செயற்திட்டத்திற்காக சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கை 2021.05.03 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் தற்போது பிரதான | செயற்திட்டத்தின் ஆரம்ப கருமங்களான சுற்றாடல் மதிப்பாய்வு சாத்தியகூறு ஆய்வு மற்றும் செயற்திட்ட வரைவு தயாரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் பிரதான நீர்த் தேக்கத்தின் அல்லது கால்வாயின் நிர்மாண வேலை அலுவல்கள் ஏதேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்த்தேக்கத்தின் திட்டமிடல் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பிரதான கால்வாய் மற்றும் துணைக் கால்வாய்கள் முறைமையில் திட்டமிடல் அலுவல்கள் 30 சதவீதம் மாத்திரம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நிர்மாண வேலை அலுவல்கள் பூர்த்தி செய்ய முடியாமல் போனது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமே ஆகும். | செயற்திட்ட கருமங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும். தாமதமின்றி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்குரிய மேற்கொள்ளப்பட்ட சாத்திக்கூறு ஆய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் தொடர்பான சுற்றாடல் பாதிப்பு மதிப்பாய்வு அறிக்கைக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை 2021 மே 03 திகதி 15 பிரதான நிபந்தனைகளின் கீழ் 94 உப நிபந்தனைகளின் கீழ் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அந்த பரிந்துரைகளை செயற்படுத்தும் நடைமுறை சாத்தியத் தன்மை மற்றும் அதற்காக மேற்கொள்ள நேரிடுகின்ற மேலதிக கிரயம் தொடர்பாக பகுப்பாய்வு ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை செயற்படுத்துவதற்கு மேலதிக கிரயம் தொடர்பான அறிக்கை தயாரித்திருக்காததுடன் எதிர்காலத்தில் செயற்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கும் போது அதற்கான அறிக்கை ஒன்று தயாரிக்கப்படும். | சுற்றாடல் தாக்க மதிப்பீட்டிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் மற்றும் சாத்திக்கூறு ஆய்வு மேற்கொண்டு கிரய நலன் பகுப்பாய்வொன்றின்றி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கக் கூடாது. |
| (iii) | செயற்திட்டத்திற்காக மேற்கொண்டிருந்த ரூபா 364.64 மில்லனிற்கான கிரயத்தில் அதிகமான தொகை பதவியணி சம்பளம் மற்றும் படி, செயற்திட்ட அலுவலகம் பேணிச் செல்லல் மற்றும் அதன் பராமரிப்பு அலுவல்கள், எரிபொருள் செலவு மற்றும் பிரயாணச் செலவு என்பனவற்றிற்கு செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலப் பகுதியில் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 364.64 மில்லியன் தொகை, செலவிடப்பட்டுள்ள முறை தொடர்பாக பொழிப்பு குறிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 10 வருடங்களுக்காக செயற்திட்டத்தின் வருடாந்த கணக்கு அறிக்கைகள் தயாரித்திருக்காததுடன் நிர்வாக செலவுகள் மற்றும் அபிவிருத்தி அலுவல்களுக்கான செலவுகள் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு கணக்குகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்ட அபிவிருத்தி செலவுகள் மற்றும் நிர்வாக அலுவல்களுக்கான செலவுகள் வெவ்வேறாக இனங்காணக் கூடியவாறு கணக்குகள் பேணிச் செல்லப்பட வேண்டும். வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (v) | பாரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களிளை மீள் மூலோபாயப்படுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல் (RAMP) குழுவின் பரிந்துரையின் படி கிவுல் ஓயா நீர்த்தேக்கம் மூடப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 30 திகதி வரை அச் செயற்திட்ட அலுவலகம் தொடர்ந்தும் திறக்கப்பட்டு காணப்படுகின்றது. | பதில் அளிக்கப்படவில்லை. | செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் நிறைவேற்றுகின்ற கருமங்களை மேற்பார்வைக்கு ஆளாக்கி மேலும் நடாத்திச் செல்லல் தொடர்பாக தீர்மானிக்க வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Out come) பெற்றுக் கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலக்கீழ் நீர் ஆய்வுத் தகவல்கள் இணைய தளமொன்று நிறுவுதல்<br><br>சிறுநீரக நோய் பாரிய அளவில் பரவியுள்ள அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவ போன்ற தெரிவு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் முன்னோடிச் செயற் திட்டமொன்றென நிலக்கீழ் நீர் ஆய்வு முறைமையொன்று செயற்படுத்துவதற்காக கிரயம் 20,629,921.18 யூரோ எனப்படும் ரூபா 3,628.39 மில்லியனிற்கான செயற்திட்டமொன்று செயற்படுத்துவதற்காக நீர்ப்பாசன நீர்வள அமைச்சுச் செயலாளரினால் 2017 ஒக்தோபர் 03 திகதி உடன்படிக்கை ஒன்று | பதில் அளித்திருக்கவில்லை. | சாத்தியக்கூறு ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கிரய நலன் பகுப்பாய்வின் போது எதிர்பார்த்த நலனை கணிப்பதற்காக அடிப்படையாக கொண்ட விவரக் குறிப்புகளுக்கு இணங்க செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது என பொறுப்பாக இருக்க வேண்டும். அது தொடர்பாக முறையான அறிக்கையிடல் ஒன்று மற்றும் நெருங்கிய தொடர் நடவடிக்கை ஒன்று நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அணுகியிருந்தது. செயற்திட்டக் கிரயத்தின் 85 சதவீதம் நெதர்லாந்தின் ரேபோ வங்கியில் இருந்து மாதாந்தம் (Rabo Bank) EURIBOR + 1.45% இற்கான சலுகை வட்டி விகிதாசாரத்தின் மீது சலுகை கொடுப்பனவு காலத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் பெற்றிருந்தது. இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ள வேண்டிய மீதியான 15% சதவீதம் ஹட்டன் நெஷனல் வங்கியில் இருந்து 3 வருட சலுகை காலம் ஒன்றுடன் 2025 இரண்டாவது அரையாண்டு முதல் 15 வருடங்களில் செலுத்தி முடிக்க வேண்டிய கடன்தொகை ஒன்றென பெற்றுக் கொண்டிருந்தது. கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்கு போதியளவு நலன்களை பெற்றுக் கொள்ளாமல் முன்வரும் 15 ஆண்டுகளுக்குள் கடனை செலுத்துவதற்கு அரசுக்கு நேரிட்டிருந்தது. | | |
| (i) | 3 வருடங்களை கொண்ட செயற்திட்ட காலம் 2 வருடங்களினால் நீடிக்கப்பட்ட பின்னர் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தியவசியமான பிரிவொன்றான தரவு நிலையம் நிர்மாணிக்கப்பட்டு இருக்காத காரணத்தினால் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள் மற்றும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தல். | செயற்திட்ட உடன்படிக்கையின் படி தரவு நிலையத்திற்காக நீர்வளங்கள் சபை அலுவலகம் அமைந்துள்ள ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் 6000ft கட்டிடம் ஒன்று நிர்மாணிக்க வேண்டியிருந்த போதிலும் கட்டிடம் நிர்மாணிக்க முடியாதிருந்த போதிலும், செயற்திட்டத்தின் குறிக்கோள் மற்றும் தேவைப்பாடுகளின் படி ரத்மலான வேலைத்தள அலுவலகத்தில் தரவு நிலையம் நிறுவி அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டனை நிறைவேற்றி இருக்காத கருமங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகை மற்றும் அதற்குரிய வட்டியினை கணித்து கடன் தொகையில் இருந்து கழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தரவு நிலையத்திற்கு பதிலாக மாற்று நிலையம் ஒன்று நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | செயற்திட்ட உடன்படிக்கையின் படி 3,094,488.18 யூரோ தொகைக்கான 15 சதவீதம் வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் செயற்திட்ட | செயற்திட்டத்தின் மூலம் உத்தேச தரவு நிலையக் கட்டிடம் நிர்மாணிக்க முடியாமையின் காரணத்தினால் 433,288 யூரோ தொகை மீதியாக | கடன் திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பு (Repayment Stucture) திருத்தப்பட்டு செலவிடப்படாத கடன் தொகை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பத்திலேயே இலங்கை அரசாங்கத்தினால் செலுத்த வேண்டியிருந்தமையால் அந்த தொகைக்கு சமமான கடன்தொகை ஒன்று இலங்கையில் ஹெட்டன் நெஷனல் வங்கியில் இருந்து பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட முற்பணத் தொகையை செலுத்தி இருத்தல் மற்றும் அதில் தரவு நிலைய கட்டிடம் நிர்மாணிப்பதற்கான கிரயமும் உள்ளடங்கியுள்ளது. | காணப்பட்டதுடன், கடன் உடன்படிக்கைக்கு இணங்க அத் தொகை கடன் தவணைகளாக சமமான வீதத்தில் கழித்தல், கடன் உடன்படிக்கையில் 5 ஆம் பந்தியில் பிரிவு 5.2 இன் படி வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அரசாங்கத்தினால் வெளிநாட்டு கடன்கள் செலுத்துவதை நிறுத்திய காரணத்தினால் தற்போது கடன் தவணைகள் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மீண்டும் தவணைகளை செலுத்த ஆரம்பித்த பின்னர் கடன் உடன்படிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட கடன் திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பு (Repayment Stucture) திருத்தப்படும் எனவும் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | கழிக்கப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (iii) | செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடுகளில் 433,288.15 யூரோக்கள் மீதியாக காணப்பட்டதுடன், அப் பெறுமதியினையும் உட்படுத்தி இலங்கை அரசாங்கத்தினால் முற்பணம் செலுத்தப்பட்டு இருந்தது. அதன் படி 509,687 யூரோக்களுக்குரிய வேலைகள் ஒப்பந்தகாரரினால் நிறைவேற்றப்படாமை தொடர்பாக திறைசேரிக்கு அறிவித்திருக்காமையால் மொத்த கடன்தொகைக்குரிய தவணைப் பணமான 876,771.65 யூரோக்கள் வீதம் 2021 செப்தெம்பர் 23 மற்றும் 2022 மார்ச் 23 ஆகிய திகதிகளில் திறைசேரியினால் செலுத்தப்பட்டிருத்தல். | கடன் உடன்படிக்கையின் படி முழுக் கடன் தொகையும் பயன்படுத்தப்படாவிடின் மீதியாகக் காணப்படும் தொகை வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தினால் கடன் மீளச் செலுத்தும் தவணைகளாக சமபங்குகளாக குறைக்கப்படுகின்றது. அரசாங்கத்தினால் வெளிநாட்டு கடன்கள் செலுத்துவதை நிறுத்தப்பட்ட காரணத்தினால் தற்போது கடன் தவணை செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தமையால் மீண்டும் தவணைகள் செலுத்த ஆரம்பிக்கும் போது கடன் உடன்படிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட திருப்பிச் செலுத்தல் கட்டமைப்பு திருத்தம் அடையும் என வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பு (Repayment Stucture) திருத்தப்பட்டு செலவிடப்படாத கடன் தொகையை கழித்துள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (iv) | அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட தொழிநுட்ப மதிப்பாய்வு குழு செயற்திட்டத்தின் | நயட்ரேட் செறிவினை அளவை செய்யும் (SDI 12 Prepared AP | இவ்வாறான திருத்தங்களுக்காக தொழிநுட்ப மதிப்பாய்வுக் |

BOQ விடயங்களை வெவ்வேறாக மேற்பார்வைக்கு உள்ளாக்கி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அங்கு BOQ விடய இலக்கம் 33 இன் பிரகாரம் நிலக்கீழ் நீரில் நய்ட்ரேட் செறிவினை அளவை செய்வதற்காக பயன்படுத்தும் 30 Nitrate Sensor மற்றும் BOQ விடய இலக்கம் 29 இன் பிரகாரம் நிலக்கீழ் நீர் மட்டம் மற்றும் 90 உஷ்ணத்தை அளவை உபகரணங்கள் (Cera-Driver 10 Meter) பொருத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் செயற்திட்ட பணிப்பாளரின் இலக்கம் PD/GWMNP/2021/39 மற்றும் 2021 ஜனவரி 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் BOQ விடய இலக்கம் 33 இல் அடங்கிய 30 உபகரணங்கள் மற்றும் BOQ 29 இல் அடங்கிய 90 உபகரணங்களை அகற்றி அதற்குப் பதிலாக நிலக்கீழ் நீர்மட்டம், உஷ்ணம் மற்றும் இலத்திரனியல் கடத்தும் திறனை அளக்கும் (CTD-Driver 10 Meter) 120 உபகரணங்கள் பொருத்துவதற்காக ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடி பொறியியல் மதிப்பீடு திருப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் அதற்காக தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

Light + Nitrate) உபகரண வகையினை பயன்படுத்தி அந்த உபகரணம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை அளவை நிர்ணயித்தல் (Calibrate) மேற்கொள்ளப்பட வேண்டுமென ஒப்பந்த கம்பனியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் கண்டறியப்பட்டதுடன், அதற்காக அந்த உபகரணங்கள் பொருத்தும் இடங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை செல்ல வேண்டியிருந்தது. இதற்காக பாரிய போக்குவரத்து செலவொன்று மேற்கொள்ள நேரிடுகின்றது. ஏனைய ஆக்கக்கூறுகள் அளவை செய்யும் உபகரணங்களை அளவை செய்தல் மற்றும் நீண்டகாலம் மாதிரிகள் பெற்றுக் கொள்வதற்காக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குறிப்பிட்ட பரிசோதனை நிலையங்களுக்கு செல்லுதல் போதியளவாகக் காணப்பட்டமையால் அந்த சந்தர்ப்பத்திலேயே நைட்ரேட் அளவைக்காக நீர் மாதிரிகள் பெற்றுக் கொள்ளல் மிகவும் பயனுள்ளது என தீர்மானிக்கப்பட்டது. நீரில் நைட்ரேட் செறிவு மாற்றமடைவதற்கு நீண்டகாலம் எடுப்பதனால் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நைட்ரேட்டை அளவை செய்தல் மேற்கொள்வதன் மூலம் பாரிய போக்குவரத்துச் செலவொன்றை சேமித்துக் கொள்வதற்கு இயலுமாக இருப்பதுடன் அந்த உபகரணங்களின் அளவை நிர்ணயித்தல் மற்றும் பராமரிப்பு செலவும் தவிர்க்கப்படுகின்றது. அதே போல் அந்த உபகரணங்களின் ஆயுட் காலமும் CTD-Driver உபகரணத்தை விட குறைவாக இருந்ததுடன் CTD Driver நிலக்கீழ் நீரின் இலத்திரனியல்கடத்தும் திறனை

குழுவின் மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமையால் அவ்வாறு மேற்கொள்ளாத உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தேவைப்பாட்டினை முறையாக இனங்கண்ட பின்னர் கணியப் பட்டியல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | அளவை செய்வதற்கு இயலுமாகக் காணப்படுகின்றது. அந்த திருத்தத்தின் காரணமாக செயற்திட்டத்தின் மூலம் ஆய்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட அளவுறுக்களில் எதுவித மாற்றமும் ஏற்படாமையால் மற்றும் செயற்திட்டதின் குறிக்கோளுக்கு சேதம் ஒன்றும் ஏற்படாமையால் இந்த முரண்கள் (Variation) என கணித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (v) | செயற்திட்டத்தின் மூலம் நிலக்கீழ் நீர் ஆய்விற்கான உயர் தொழிநுட்ப உபகரணங்கள் பொருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த 190 குழாய் கிணறுகள் மற்றும் அதற்குரிய பராமரிப்பு உபரகணங்களை முறைப்பிரகாரம் நீர் வளங்கள் சபைக்கு சாட்டுதல், ஒப்பந்த உடன்படிக்கைகளின் கீழ் வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை வழங்குதல், கணக்குகளை தீர்த்தல் உட்பட கருமங்களை பூர்த்தி செய்து செயற்திட்டத்தை முடிவுறுத்தி குறிப்பிட்ட பதிவேடுகள் செயற்திட்டத்தின் எதிர்கால செயற்பாட்டிற்காக சாட்டப்படும் நீர் வளங்கள் சபைக்கு முறைப் பிரகாரம் சாட்டப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக கிடைத்திருந்த நிலையான சொத்துக்கள் நீர் வளங்கள் சபையினால் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் நுகர்வுப் பண்டங்கள் பெற்றுக் கொள்ளல் இதுவரை தாமதமாகி இருந்தது. இதே போல் நிர்மாணிக்கப்பட்டிருந்த 190 ஆய்வுக் கிணறுகளுக்குரிய கையேடுகள் மற்றும் செயற்திட்டத்திற்குரிய கோப்புக்களை ஒப்படைப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் படி செயற்திட்ட பணிப்பாளரினால் நீர் வளங்கள் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு இது வரை பதில் கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை வழங்குதல் மற்றும் கணக்குகளை தீர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என செயற்திட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை வழங்குதல், கணக்குகளை தீர்த்தல் உட்பட கருமங்களை பூர்த்தி செய்து செயற்திட்டத்தை முறைப் பிரகாரம் முடிவாக்கி குறிப்பிட்ட பதிவேடுகள் செயற்திட்டத்தின் எதிர்கால செயற்பாட்டு அலுவல்கள் சாட்டப்படுகின்ற நீர் வளங்கள் சபைக்கு முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சொத்துக்களை பெற்றுக் கொண்ட பின்னர் கொம்ட்டோர் ஜனராலுக்கு அறிவிக்க வேண்டுமென நீர் வளங்கள் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பாரியளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீள் மூலோபாயப்படுத்தும் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் பரிந்துரையின் பிரகாரம் பிரதமர் செயலாளரினால் 2023 ஜனவரி 13 திகதி நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடிதத்தின் படி நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 333,569 மில்லியன் தொகை மற்றும் அமெரிக்கா டொலர் 690 மில்லியன் இற்கான 9 செயற்திட்டங்கள் 2023 ஆண்டு முதல் செயற்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 203,159 மில்லியன் கிரயம் ஒன்று மேற்கொண்டிருந்த இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது நிலவிய பலவீன முகாமைத்துவம் காரணமாக திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யாமல் கைவிடுவதற்கு நேரிட்டிருந்தது. அவற்றில் 7 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 0 சதவீதத்திலிருந்து 13.16 சதவீதத்திலான குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. | செயற்திட்டங்களில் 2022 ஆண்டில் பூர்த்தி செய்யக் கூடிய செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்து செயற்திட்ட அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதன்படி அச் செயற்திட்டங்கள் 100% பௌதீக ரீதியாக பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும், பௌதீக ரீதியாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் என கணிக்கப்பட்டுள்ளது.<br>கிராமிய குளங்கள் அபிவிருத்திற்கு உரிய முன்னேற்ற அறிக்கைகள் மாவட்ட மட்டத்தில் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் வழங்கியிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசன அமைச்சின் திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், அவ்வவ் சந்தர்ப்பங்களில் அமைச்சு மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. | புதிய செயற்திட்ட பிரேரணைகளை செயற்படுத்துவதற்கு முன்னர் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் கணிசமான கிரயமொன்று மேற்கொண்டுள்ள செயற்திட்டங்களின் அலுவல்களை பூர்த்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதார நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொண்டு முக்கியத்துவ அடிப்படையின் மீதேனும் பூர்த்தி செய்வதற்கான பரிந்துரையுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | **தல்பிடிகல நீர்த்தேக்க செயற்திட்டம்** | | |
| | இதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14/1281/508/015/டீபீஆர் இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2014 செப்தம்பர் 18 திகதி கிடைத்திருந்த அங்கீகாரத்தின் படி ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தின் அலுவல்கள், உமாஓய செயற்திட்டத்திற்கு பொதுமக்கள் எதிர்ப்பு | தல்பிடிகல நீர்த்தேக்க செயற்திட்டம் உமாஓய செயற்திட்டத்துடன் செயற்படுத்த வேண்டிய மிகவும் அத்தியவசியமான செயற்திட்டம் ஒன்றாக காணப்படுவதுடன், வெளிநாட்டு நிதியங்கள் பெற்றுக்கொண்டு செயற்படுத்த வேண்டிய செயற்திட்டங்களில் முக்கியத்துவத்துடன் காணப்படும் | சாத்தியக்கூறு ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கிரய நலன் பகுப்பாய்வின் போது எதிர்பார்த்த நலனை கணிப்பதற்காக அடிப்படையாக கொண்ட விவரக் குறிப்புகளுக்கு இணங்க செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது |

காணப்பட்டமையால் ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனது செயற்திட்டத்திற்காக 2017 திசெம்பர் மாதம் சீனாவின் EXIM வங்கியுடன் கடன் உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் வேலை அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் கடன் உடன்படிக்கை செயற்படுத்தப்படாமையால் 2019 ஆண்டில் ஒப்பந்த வேலைக் கம்பனி செயற்திட்டத்தை இடைநிறுத்திவிட்டு களத்திலிருந்து விலகியிருந்தது.
இலங்கை குடியரசின் நிதி ஏற்பாடுகளின் மீது 2020 ஆண்டின் போது மீண்டும் செயற்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை ரூபா 610 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அடிப்படைக் குறிக்கோள்களின் கீழ் இனங்கண்டிருந்த பொருளாதார நலன்களை திட்டமிட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்ததுடன், செயற்திட்டத்திற்காக இதுவரை மேற்கொண்டிருந்த கிரயத்தின் மூலம் இதுவரை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு ஏதும் கிடைத்திருக்கவில்லை.

செயற்திட்டம் ஒன்றாகும். எனினும், பாரியளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீள்மூலோபாயப்படுத்தும் மற்றும் துரிதப்படுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரை மீது நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் நிதி நெருக்கடி தொடர்பாக கவனம் செலுத்தி தல்பிடிகல செயற்திட்டத்தின் அலுவல்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2023.05.31 திகதியின் பின்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டு அதன்மூலம் செயற்திட்ட அலுவல்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றது. இநத் செயற்திட்டம் ஆரம்பம் முதல் 2023 மே 31 வரை ரூபா 610 மில்லியனிற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன், செயற்திட்டத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்தப் பணம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

என பொறுப்பாக இருக்க வேண்டும். அது தொடர்பாக முறையான அறிக்கையிடல் ஒன்று மற்றும் நெருங்கிய தொடர் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டும்.

**(இ) தெமடகல்ல மற்றும் குடாவிலச்சிய குளங்களை மறுசீரமைக்கும் செயற்திட்டம்**

மஹவிலச்சிய பிரதேச செயலகப் பிரிவில் குடாவிலச்சிய குளம் மற்றும் பலாகல பிரதேச செயலகப் பிரிவில் தெமடகல்ல குளங்களை மறுசீரமைப்பதற்காக 2019 மே 29 திகதிய அமப/19/1341/118/014 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி,

| | | | |
|---|---|---|---|
| (i) | 32 கிராமியக் குளங்களின் கீழ் 550 ஹெக்டயர் பயிர்ச்செய்கைகள் உட்பட பல்வேறு நலன்களை குறிக்கோளாக கொண்டு தெமடகல்ல குளம் மீள்நிறுவுதல் போலவே போஷிக்கும் கால்வாயொன்றுடன் ஹெவன்எல்ல அணைக்கட்டு மறுசீரமைப்பு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 03 வருடங்களுக்குள் ரூபா 1.43 மில்லியன் தொகை செலவீடு செய்த பின்னர் பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மீள்மூலாபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரையின் பிரகாரம் செயற்திட்டத்தை நிறுத்திவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் அடிப்படைக் குறிக்கோள்களின் கீழ் இனங்கண்டிருந்த பொருளாதார நலன்கள் திட்டமிடப்பட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்நததுடன்,இதுவரை மேற்கொண்டிருந்த கிரயத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு ஏதும் கிடைத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | புதிய செயற்திட்ட பிரேரணைகளை செயற்படுத்துவதற்கு முன்னர் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் கணிசமான கிரயமொன்று மேற்கொண்டுள்ள பாரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்கள் மூலோபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரை காரணமாக நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் அலுவல்களை பூர்த்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளாதார நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொண்டு முக்கியத்துவ அடிப்படையிலேனும் பூர்த்தி செய்வதற்கான பரிந்துரையுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ii) | அமைச்சரவை தீர்மானத்தின் படி பல்வேறு நலன்களை குறிக்கோளாக கொண்டு 2019 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த குடாவிலச்சிய நீர்த்தேக்க மறுசீரமைப்பு செயற்திட்டத்திற்காக ஒரு வருடத்தில் ரூபா 120.55 மில்லியன் தொகை செலவிடப்பட்ட பின்னர் பாரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மீள்மூலாபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரையின் மீது நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தினால் அடிப்படை குறிக்கோள்களின் கீழ் இனங்கண்டிருந்த பொருளாதார சமூக சுற்றாடல்சார் ரீதியான நலன்களை திட்டமிடப்பட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | புதிய செயற்திட்ட பிரேரணைகளை செயற்படுத்துவதற்கு முன்னர் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் கணிசமான கிரயமொன்று மேற்கொண்டுள்ள பாரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்கள் மூலோபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் (RAMP) குழுவின் பரிந்துரை காரணமாக நிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் அலுவல்களை பூர்த்தி செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருளாதார நலன்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கொண்டு முக்கியத்துவ அடிப்படையிலேனும் பூர்த்தி செய்வதற்கான பரிந்துரையுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் கீழ் காணப்படும் கிராமிய வயல்களை அண்டிய குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூலம் 2021 ஆண்டின் ரூபா 4.25 மில்லியன் தொகையும் 2022 ஆண்டு 4.06 மில்லியன் தொகையுமாக ரூபா 8.31 மில்லியன் தொகையொன்று செலவுகள் மேற்கொண்டிருந்த பௌதீக முன்னேற்றம் 50 சதவீதம் வரையான 42 ஒப்பந்த வேலைகள் மீளாய்வாண்டு இறுதியில் இரத்துச்செய்யப்பட்டிருந்தது.<br>மேலும், கூட்டுத்தொகை ரூபா 236.55 மில்லியனிற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த 29 ஒப்பந்த வேலைகளும், ஏற்பாடுகளின் பெறுமதி காட்டப்பட்டிருக்காத 03 ஒப்பந்த வேலைகளும் செயற்படுத்தாமல் இரத்துச் செய்யப்பட்டிருந்துடன், இரத்துச் செய்வதற்கு நேரிட்டிருந்த காரணத்தினை முன்னேற்ற அறிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை. | கிராமிய குளங்கள் அபிவிருத்தி மற்றும் உரிய முன்னேற்ற அறிக்கைகள் மாவட்ட மட்டத்தில் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் வழங்கியிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நீர்ப்பாசன அமைச்சின் திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவ்வவ் சந்தர்ப்பங்களில் அமைச்சு மட்டத்தில் மற்றும் தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டே ஆகும். | ஒப்பந்த வேலைகளை இரத்துச் செய்தலுக்கான காரணம் முன்னேற்ற அறிக்கைகளில் அறுதியாக வெளிப்படுத்த வேண்டும். அதன் படி தொடர் நடவடிக்கை தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (உ) | **எஹடுகஸ்வெவ, வெலிஆர அணைக்கட்டிலிருந்து கிரிஇப்பன்வெவ வரையான 2.7 KM போசித்தல் கால்வாயொன்று நிர்மாணித்தல்** | | |
| | எஹடுகஸ்வெவ அலகின் வெலிஆர அணைக்கட்டு முதல் கிரிஇப்பன்வெவ வரை பாயக்கூடிய 2.7 KM தூர அளவினைக் கொண்ட போசித்தல் | பதிலளிக்கப்படவில்லை. | முறையான சாத்தியக்கூறு ஆய்வொன்று மற்றும் திட்டமிடல் ஒன்றின்றி செயற்திட்டத்தை செயற்படுத்தி மனித வாழ்விற்கு அச்சுருத்தல் |

கால்வாயினை நிர்மாணித்தல் 2018 ஆகஸ்ட் மாதம் தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ரூபா 3.4 மில்லியன் தொகைக்கு சாட்டப்பட்டிருந்தது. அந்த அணைக்கட்டின் நிர்மாண வேலை அலுவல்களின் 60 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரரிடம் நட்டஈடு அறவீடு செய்வதற்கு அல்லது ஒப்பந்தக்காரரை கரைநிரற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குறிப்பிட்ட கால்வாயின் மீதிப்பகுதியை நிர்மாணித்தல் நேர் உழைப்பு அடிப்படையில் 2019 ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக குறிப்பிட்ட கிரயம் சிக்கனமற்ற நிலைமையை அடைதல் மாத்திரமன்றி கால்வாயின் கீழ்ப்பகுதியில் கிடங்குகளில் நீர்த்தங்கியிருத்தல், எஹடுகஸ்வெவ கிராமம் ஊடாக கால்வாய் பாய்வதனால் வதிவோர்களின் காணிகள் இரண்டாக பிரிந்து காணப்படல். முறையான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் திட்டமிடலொன்று இன்றி செயற்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் கால்வாயின் சில இடங்களில் ஆழம் 30 அடி அளவில் காணப்பட்டல் அவ்வாறான இடங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மனித வாழ்வுக்கு அச்சுருத்தல் ஏற்பட்டிருந்தமை ஆகிய சமூக மற்றும் சுற்றாடல் சிக்கல்கள் உருவாகியிருந்தது.

ஏற்படுத்திய சமூக மற்றும் சுற்றாடல் சிக்கல்களை உருவாக்கிய குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களிடம் நட்டஈடு அறவீடு செய்வதற்கு மற்றும் கரைநிரல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக்கோவையின் தொகுதி II இன் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) உமாஓய பல்கரும அபிவிருத்திச் செயற்திட்டம்**<br><br>செயற்திட்டம் 2008 ஆரம்பிக்கப்பட்டு 07 வருடங்களில் அதாவது 2015 நவம்பர் 15 திகதி பூர்த்தி செய்வதற்கு அடிப்படை குறிக்கோளாக இருந்த போதிலும் 8 சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது 2021 ஜூன் 30 திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஈரானின் பராப் கம்பனி 2008 ஏப்ரல் 28 திகதி பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாண வேலை (EPC) ஒப்பந்த வேலையின் கீழ் ஒப்பந்த வேலை உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருந்ததுடன், திருத்திய மொத்த கிரய மதிப்பீடு அமெரிக்க டொலர்கள் 529.06 மில்லியன் எனப்படும் ரூபா 74,325.75 மில்லியன் தொகையாக காணப்பட்டது. மேற்கூறிய உடன்படிக்கையின் கீழ் 2023 ஏப்ரல் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 70,585.08 மில்லியனிற்கான வேலைகள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்கான நிதியம் ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் மூலம் நிதியளிப்பு செய்வதன் கீழ் அமைச்சரவை தீர்மானத்தின் படி போட்டி அடிப்படை கூறுவிலை அழைக்கப்படாமல் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2013 ஆண்டின் போது ஈரானுக்கு விதிக்கப்பட்ட பொருளாதார தடை காரணத்தினால் ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியினால் கடன்தொகையை இடைநிறுத்தியிருந்தது. செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | அமெரிக்க டொலர்கள் 50 மில்லியன் எனப்படும் ரூபா 6,522.85 மில்லியன் தொகை வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கையின் மூலம் நிதியளிப்பு செய்த பின்னர் செயற்திட்டத்தின் இதுவரையான கிரயமாகிய அமெரிக்க டொலர்கள் 437.11 மில்லியன் எனப்படும் ரூபா 71,056.14 மில்லியன் தொகை இலங்கை அரசாங்க நிதியத்தின் மூலம் நிதியளிப்புச் செய்யப்பட்டது. இந்த செயற்திட்டம் உள்நாட்டு நிதியத்தின் மூலம் முன்னெடுத்துச் செல்லல் தொடர்பாக தீர்மானிக்கும் போது சர்வதேச போட்டி நிலை கூறுவிலை அழைப்பு ஊடாக இலங்கைக்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த போட்டித் தன்மையின் நலன்கள் தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொண்டு அமைச்சரவையை அறிவுருத்தியிருக்கவில்லை. | 2007 நவம்பர் 27 திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசு மற்றும் ஈரான் இஸ்லாமிய குடியரசு இடையே கையொப்பமிடப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் பிரகாரம் ஈரான் ஏற்றுமதி வங்கி (EDBI) நிதியத்தின் கீழ் உமாஒயா பல்கரும அபிவிருத்திச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ஈரான் இஸ்லாமிய அரசினால் பிரதான ஒப்பந்தக்காரராக ஈரானின் பராப் கம்பனி பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல் அந்த செய்முறைக்காக அப்போதைய அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட ஒப்பந்த வேலைக்காக போட்டி நிலை கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தால் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படவிருந்த இலாபம்/ நட்டம் அந்த சம்பவத்தின் 14 வருடங்களின் பின்னர் தற்போது கணிப்பதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகில் அது தொடர்பான தகைமையுடைய உத்தியோகத்தர்கள் காணப்படாததுடன், அதற்காக பொருளாதார, நிதி அலுவல்கள், பெறுகை அலுவல்கள் ஆகிய விடயங்கள் தொடர்பாக விரிவான மற்றும் செய்முறை சார்ந்த இயலுமையைக் கொண்ட நிபுணர் குழுவொன்று ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியுள் சாட்டுதல் ஒன்று என வழங்கப்பட்டு அவ்வாறான தகவல்கள் பெற்றுக்கொள்ளல் மிகவும் | செயற்திட்டத்தின் செயற்பாடுகளில் இவ்வாறான கட்டமைப்புசார் மாற்றங்களுக்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கும் போது, அரசுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய போட்டி நிலை நலன்கள் தொடர்பாக மதிப்பாய்வு செய்து அமைச்சரவையை அறிவுருத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொறுத்தமானதாகும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் தகவல்கள் அடங்கிய அமைச்சவை பத்திரம் ஒன்றின் மூலம் அமைச்சரவையை அறிவுருத்தல் மிகவும் பொறுத்தமென தோற்றுகின்றது. | |
| (ii) | 2023 மே 15 அளவில் செயற்திட்டத்தின் தாமத காலம் 7 வருடங்களும் 6 மாதங்களாக காணப்பட்டதுடன், மேற்கூறிய தாமதத்தின் காரணத்தினால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்துகொள்வதற்கு முடியாமல் இருந்தது. அங்கு மின் உற்பத்தி முறைமைக்கு 120 மெகா வொட் மின்சக்தியொன்று சேர்த்துவதன் மூலம் ஒரு நாளைக்கு மின்சார சபைக்கு ரூபா 55 மில்லியனை விட மிகையான தொகையொன்று சேமிக்கப்படும் என கணிக்கப்பட்டிருந்தது. அதன்படி, செயற்திட்டம் 7 ½ வருடங்கள் தாமதடைந்த காரணத்தினால் ரூபா 150,562 மில்லியன் தொகைக்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டம் உரியவாறு 2015 நவம்பர் மாதம் பூர்த்தி செய்து தேசிய மின்சக்தி முறைமைக்கு 120 மெகா வொட் நீர் மின்சக்தி கொள்திறனொன்று சேர்த்திருந்தால் அன்று முதல் இன்று வரை மின்சார சபைக்கு கிடைக்கும் நலன்களை சரியாக கணித்தல் மின்சார சபையில் இது தொடர்பாக திறன்கள் உடைய பொறியியலாளர் குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக அவர்களுக்கு அறிவித்து அந்த நலன்கள் தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கால நீடிப்பு அங்கீகரிக்க முன்னர் செயற்திட்டத் தாமதத்தினால் சந்தர்ப்பக் கிரயத்தினை கணித்து உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரருடன் தொடர்பு கொண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | இதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2008 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 7 வருடங்களில் அதாவது 2015 நவம்பர் 15 திகதி பூர்த்தி செய்வதற்கு ஆரம்பத்தில் எதிர்பாராததாக இருந்த போதிலும் ஆரம்ப அமைச்சரவை பத்திரங்கள் மூலம் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்த அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் நீடிக்கப்பட்ட கால வரையறையுள் அரசுக்கு மேலதிக செலவொன்று இன்றி அனைத்து நிர்மாண வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு செயற்திட்டம் முறைப்பிரகாரம் அரசுக்கு ஒப்படைக்கும் | செயற்திட்டம் தாமதமடைவதற்கான காரணம் என நீர் ஒழுகுதல், கொவிட் தொற்றுநோய் ஆகிய அனேக நிச்சயமற்ற நிலைமைகள் ஏற்பட்டதை சுட்டிக்காட்ட முடியுமானதுடன், அந்த விடயங்களினால் தாமதமடைந்த கால வீச்சிக்காக ஒப்பந்தக்காரர் முறைப் பிரகாரம் கால நீடிப்புப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமையால் செயற்திட்ட தாமதத்திற்காக சந்தர்ப்பக் கிரயம் | நீடிக்கப்பட்ட காலத்தினுள் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்காமையால் தொழில் வழங்குனரான இலங்கை குடியரசிக்கு ஏற்பட்டிருந்த நட்டம் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயற்திட்டத்திற்குரிய அடுத்த அமைச்சரவை விஞ்ஞாபனம் |

| | | | |
|---|---|---|---|
| | நிபந்தனையின் கீழ் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஒப்பந்தக்காரருக்கு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கால வரையறையுள் எதிர்பார்த்த நலன்கள் கிடைத்திருக்காத போதிலும் அதன் மூலம் தொழில் வழங்குனராகிய இலங்கை குடியரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை கணிப்பீடு செய்து EPC ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. செயற்திட்டத்திற்குரிய 66 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் எச் சந்தர்ப்பத்திலும் அது தொடர்பாக அமைச்சரவையை அறிவுருத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணிகத்தல் தேவைப்படமாட்டாது. | சமர்ப்பிக்கும் போது இது தொடர்பான தகவல்கள் அமைச்சரவைக்கு அனுப்ப வேண்டும். |
| (iv) | ஒப்பந்தக்காரரினால் செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக தேவையான காணிக்கு நுழையும் உரிமை வழங்களில் தாமதம், முடிவுற்ற வேலைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பில்பத்திரங்களின் கொடுப்பனவில் தாமதம் மற்றும் நிர்மாண வேலை வேலைத் தளத்திற்காக வழங்கப்பட வேண்டிய தரவுகள் வழங்குவதில் தாமதம் போன்ற 05 விடயங்களுக்காக ஒப்பந்தக்காரரின் தாமதக் கட்டண உரிமை என அமெரிக்க டொலர்கள் 181,337,171 தாமதக் கட்டணமொன்று அரசியிலிருந்து கோறியிருந்தது. அமைச்சரவையினால் இது தொடர்பாக கண்டறிந்து பரிந்துரைகள் சமர்ப்பிப்பதற்காக கலந்துரையாடல் ஒருமித்த குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அந்தக் குழுவின் அறிக்கையின் மூலம் ஒப்பந்தக்காரரின் தாமதக் கட்டண உரிமை என அமெரிக்க டொலர் 19,517,082 தொகையொன்று | அவதானிப்புக்கள் சரியானவை. | அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கும் போது தகவல்கள் சரியாக உட்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். கலந்துரையாடல் ஒருமித்த குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாமத உரிமைக்காக பரிந்துரைக்கப்பட்ட தொகை அமைச்சரவை பத்திரத்தில் 19.09 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மிகையாக காட்டப்பட்டிருந்தமை தொடர்பாக அமைச்சுச் செயலாளர் பொறுப்புச் சொல்ல வேண்டும். அதன்படி, செயலாளர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக அங்கு, ஈரான் அரசுக்கு விதித்திருந்த பொருளாதார தடை மற்றும் ஏனைய எதிர்பார்க்காத சிரமங்கள் காரணமாக ஒப்பந்தக்காரர் முகங்கொடுக்கும் நிதிசார் தடைகளுக்காக அனுதாப ரீதியான காரணத்தின் மீது அமைச்சரவையின் விருப்பத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு அமெரிக்க டொலர்கள் 19,094,795 கொடுப்பனவு செய்வதற்கான கவனம் செலுத்துவதற்கு கலந்துரையாடல் ஒருமித்த குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. 2021 ஒக்தோபர் 31 திகதி இது தொர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த IR/2021/62 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் கலந்துரையாடல் ஒருமித்த குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தாமதக் கட்டணமாக அமெரிக்க டொலர்கள் 38.612 மில்லியன் அதாவது மேற்கூறியவாறு அனுதாப ரீதியான காரணங்களுக்காக கவனம் செலுத்துவதற்கு பிரேரிக்கப்பட்ட தொகையும் உட்பட, குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பெறுமதி 38.612 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என விளக்கமளித்து அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(v) அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்டிருந்த 07 ஆங்கத்தவர்களைக் கொண்ட ஒருமித்த குழுவிற்காக கலந்துரையாடல் செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் அந்தச் செய்முறையுடன் தொடர்புபட்டிருந்த மற்றும் அது தொடர்பாக முழுமையான புரிந்துணர்வுடைய உத்தியோகத்தர்கள் உட்படுத்தியிருக்காமை மற்றும் செயற்திட்டத்துடன் நேரடி தொடர்பில்லாத உத்தியோகத்தர் குழாம் ஒன்றினை குழுவிற்கு நியமனம் செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. குழுவினால் அத்தியவசியமான தரப்பினருடன் போதியளவு தொடர்பாடல் | உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரரினால் கோறியிருந்த தாமதக் கட்டண உரிமை தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த குழு சுயேட்சையான, நடுநிலைமையுடைய குழுவொன்றாக காணப்படல் அத்தியவசியமாக இருந்தமையால் அவ்வாறான குழுவொன்று நிறுவப்பட்டவுடன் குறிப்பிட்ட குழுவின் அங்கத்தவர்கள் செயற்திட்டத்திற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்காவிடினும், குறிப்பிட்ட விடயங்களில் | ஒருமித்த கலந்துரையாடல் குழுவினால் தொழில்சார் நடைமுறைகளை கவனத்தில் எடுக்காமல் பரிந்துரை சமர்ப்பிப்பதன் மூலம் நட்டம் ஏற்படுத்தல் மற்றும் சட்டவிரோதமான நடத்தை தொடர்பாக குழு அங்கத்தவர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், விசாரணைகள் பரிந்துரைக்கப்பட்ட பிரகாரம் இந்த விடயங்கள் தொடர்பாக

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டிருக்காமை, செயற்திட்டத்தின் அலுவல்கள் ஆரம்ப உடன்படிக்கை காலத்திற்கு சமமான கால தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்த போது அதன் மூலம் இலங்கை குடியரசிற்கு ஏற்பட்டிருந்த நட்டம் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அறவீடு செய்யக் கூடிய இயலுமை தொடர்பாக எதுவித கவனமும் செலுத்தயிருக்காமை. ஒப்பந்த கால நீடிப்பின் போது “அரசிற்கு வேலையின் மேலதிக செலவொன்று இன்றி கால நீடிப்பு வழங்கப்பட்ட காலப் பகுதியில் அனைத்து நிர்மாண வேலைகளையும் பூர்த்தி செய்து செயற்திட்டத்தை முறைப் பிரகாரம் அரசிற்கு ஒப்படைத்தல்” ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிபந்தனைகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காமை, குழுவின் பரிந்துரையினுள் அனுதாபம் காரணமாக அமைச்சரவை விரும்பின் அமெரிக்க டொலர்கள் 19,094,795 இற்கான மேலதிக கட்டணமொன்று செலுத்துவதற்கு நிச்சயிக்கப்படாத தொழில்சார் பயன்பாடின்றிய பரிந்துரைகள் உட்படுத்தப்பட்டிருத்தல் ஆகிய காரணங்களினால் குழுவின் பரிந்துரை உள்ளடங்கியுள்ளதென அனைத்து விடயங்களும் திருப்தியடைய முடியாதுள்ளது. | விஷேடத்துவ அறிவுடையவராக காணப்பட்டவுடன், செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட செய்முறைகள் தொடர்பாக அனைத்து தகவல்களும் செயற்திட்டத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களினால் பெற்றுக்கொண்டு ஆழமாக ஆய்வு செய்து முடிவு ஒன்றுக்கு அணுகியிருந்ததென தெரிகின்றது. | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(1) ஏற்பாடுகளின் பிரகாரம் வினைப்படுத்தும் முகவராண்மை நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய வேண்டும். |
| (vi) | 2015 நவம்பர் 15 திகதி முதல் 2023 ஜூன் 30 வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு 8.7 இன் பிரகாரம் ஒரு நாளைக்கு ஒப்பந்தப் பெறுமதியில் 0.01 சதவீதமாக உச்சமட்டம் 5 சதவீதம் வரையான தாமதக் கட்டணம் என அமெரிக்க டொலர்கள் 26.453 மில்லியன் அறவீடு செய்யக்கூடியதாக இருந்த போதிலும், அந்தத் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்திருக்காததுடன், தாமதக் கட்டணம் என ஒப்பந்தக்காரரிடம் அமெரிக்க டொலர்கள் 6.6 | உமாஓயா பல்கரும செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் தாமதம் அடைதல் தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அதன் ஒப்பந்தக்காரர் FARAB நிறுவனத்தில் இருந்து தாமதக் கட்டணம் என அமெரிக்க டொலர்கள் 6.6 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | கால நீடிப்பு பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் கருமங்கள் பூர்த்தி செய்யாமை தொடர்பாக குறிப்பிட்ட தாமதக் கட்டணம் அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக அறிவுறுத்தாமையின் காரணத்தினால் அறவீடு செய்யக்கூடியதாக |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் தொகை மாத்திரம் அறவீடு செய்திருந்தது. | | இருந்த மொத்த தாமதக் கட்டணம் அறவீடு செய்ய முடியாமல் இருந்தமையால் கால நீடிப்புக்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு குறிப்பிட்ட நட்டங்களை அறவீடு செய்ய வேண்டும். |
| (vii) | தாமதக் கட்டணம் என அறவீடு செய்யப்பட்டிருந்த அமெரிக்க டொலர்கள் 6,631,364 தொகையில் அமைச்சரவை தீர்மானத்தின் படி அமெரிக்க டொலர்கள் 5,305,091 திருப்பி செலுத்தியிருந்தது. EPC ஒப்பந்த உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளின் படி அறவீடு செய்யப்பட்ட தாமதக் கட்டணத்தை திருப்பிச் செலுத்துவதன் மூலம் நீடிக்கப்பட்ட கால வரையறைக்குரிய மேலதிக செலவுகளுக்காக ஒப்பந்தக்காரருக்கு உரிமை கோருவதற்கு இயலுமை கிடைக்கின்றதென மற்றும் அதன் மூலம் ஏற்படுகின்ற ஈடுபாட்டுப் பொறுப்புக்களின் தாக்கம் தொடர்பாக மேற்கூறிய அமைச்சரவை பத்திரத்திற்காக பரிந்துரைகள் வழங்கும் போது அமைச்சரவையை அறிவுருத்தியிருக்கவில்லை. | எவ்வாறாயினும், ஒப்பந்தக்காரர் FARAB கம்பனி அவ்வாறு தாமதக் கட்டணம் அறவீடு செய்வதற்கு இணங்கியிருக்காமையால் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி அமைச்சரவை அங்கீகாரத்தின் படி அந்த அறவீடு செய்யப்பட்ட தொகையில் 80 சதவீதத்தை திருப்பிச் செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதன் பின்னர் இதுவரை அமைச்சரவையினால் ஒப்பந்த வேலை காலப் பகுதிக்காக நீடிக்கப்பட்டிருந்தமையால் தாமதக் கட்டண உரிமைக்கான கோரிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் மீண்டுமொருமுறை அதற்காக நிலவுகின்ற பாதிப்புக்கள் தொடர்பாக அறிவுருத்தும் தேவைப்பாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | கால நீடிப்புக்கள் வழங்குவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சமர்ப்பிக்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் கருமங்கள் பூர்த்தி செய்யாமை தொடர்பாக தாமதக் கட்டணம் அறவீடு செய்யும் இயலுமை மற்றும் அவ்வாறு அறவீடு செய்யப்பட்ட கட்டணத்தையும் திருப்பி செலுத்தியதன் மூலம் விலை முரண்கள், நிருவாகச் செலவுகள் போன்ற மேலதிக செலவுகளுக்காக உரிமை கோருவதற்காக ஒப்பந்தக்காரருக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் தொடர்பாக அறிவுருத்தாமையின் காரணமாக கட்டணத்தை திருப்பிச் செலுத்துவற்கு பரிந்துரைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (viii) | செயற்திட்டத்தின் பிரதான சுரங்கத்தில் ஏற்பட்டிருந்த நீர் ஒழுகலுக்காக 2021 ஆகஸ்ட் 31 திகதி அளவில் செயற்திட்ட அலுவலகத்தினால் ரூபா 1,931.34 மில்லியன் தொகை பாதிக்கப்பட்ட | 2021.12.21 திகதிய அமைச்சுச் செயலாளரின் தலைமையில் 14 அங்கத்தவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் இது | கணக்குக் குழுவினால் வழங்கியிருந்த கட்டளைகளை செயற்படுத்த வேண்டும். அரசுக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை |

| | | |
|---|---|---|
| தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரினால் இது தொடர்பாக காப்புறுதிக் கம்பனியில் இருந்து அமெரிக்க டொலர்கள் 8,155,981 இற்கான நட்டஈடொன்று பெற்றுக்கொண்டிருந்ததுடன், ஒப்பந்தக்காரரினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டு தொகையினை அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகை ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என 2019 மே 22 திகதி அரச கணக்குக் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 1,124.62 மில்லியன் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | தொடர்பாக சட்ட ஆலோசனைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அமைச்சின் சட்ட உத்தியோகத்தருக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ளும் படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவீடு செய்வதற்கு தாமதமாகும் காலப் பகுதிக்காக வாணிப வங்கி வட்டி வீதப்படி கணிக்கப்பட்ட வட்டியுடன் ஒப்பந்தக்காரரிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 பணம் விடுவிக்கப்பட்ட போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | நீர்ப்பாசன அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மொரகஹகந்த, யான்ஓயா, உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக காணிகளை தனதாக்கல், நட்டஈடு வழங்கல் மற்றும் மீள் குடியேற்றல் அலுவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | **உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டம் -** | **உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டம்** | |
| | உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நட்டஈடு செலுத்துவதற்காக மேற்கொண்டிருந்த செலவு ரூபா 1,491.30 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், 2015 ஆண்டில் குறிப்பிட்ட கருமங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | நட்டஈடு செலுத்துவதற்கு மீதியாக உள்ள 200 காணித் துண்டுகளுக்காக நட்டஈடு செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணம் நீதிமன்ற அலுவல்கள், விசாரணை அலுவல்களுக்காக நபர்கள் முன்வராமை, உரிய | மீதியான 200 காணித் துண்டுகளுக்காக தாமதம் இன்றி நட்டஈடு செலுத்தப்பட வேண்டும். நட்டஈடு செலுத்தப்பட்ட காணிகளை உரித்தாக்குவதற்கு மற்றும் அறிவிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| வெலிமட, ஊவாபரணகம, எல்ல, ஹாலிஎல, வெல்லவாய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக 1786 காணித் துண்டுகள் நட்டஈட்டுக் கொடுப்பனவிற்காக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 1586 தொகைக்காக மாத்திரம் நட்டஈடு வழங்கப்பட்டிருந்தது. நட்டஈடு வழங்கப்பட்ட காணிகளை முறைப் பிரகாரம் உரித்தாக்கி கணக்கீடு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நட்டஈடு செலுத்துதல் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் வட்டியாக ரூபா 163.85 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முறையில் ஆவணங்கள் முறைப் பிரகாரம் சமர்ப்பிக்காமை, வெளிநாடு சென்றிருத்தல் மற்றும் இறப்பு ஆகிய விடயங்கள் மீது இந்தத் தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், காணிகளை தனதாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்படும் போது மற்றும் பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்படும் போது கால தாமதம் ஒன்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **யான்ஓயா செயற்திட்டம்**

| | | |
|---|---|---|
| யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழ் காணிகள் தனதாக்குவதற்காக ரூபா 4,294 மில்லியன் தொகை செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன், ஆரம்ப திட்டத்தின் படி 2019 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நட்டஈடு செலுத்தல் மற்றும் காணியைை உரித்தாக்கல் அலுவல்கள் 4 வருடங்கள் தாமதமாகியிருந்தது. நீர்த்தேக்கத்தின் கீழ் முழுமையான நட்டஈடு செலுத்த வேண்டிய 3644 காணித் துண்டுகளில் 311 இற்காகவும், இடது கரையின் கீழ் முழுமையான நட்டஈடு செலுத்த வேண்டிய 536 காணித் துண்டுகளுக்காகவும், கோமரன்கடவல பிரதேச செயலாளர் பிரிவில் 42 வயற் காணித் துண்டுகளுக்காகவும் மேலும் நட்டஈடு செலுத்த வேண்டியிருந்தது. நட்டஈடு செலுத்தப்பட்ட காணிகளை முறைப் பிரகாரம் உரித்தாக்கி கணக்கீடு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய காணிகள் தனதாக்கல் மற்றும் நட்டஈடு செலுத்தும் கருமங்களை தாமதமின்றி பூர்த்தி செய்வதில் பொறுப்பாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(இ)** | **மொரகஹகந்த செயற்திட்டம்** | **மொரகஹகந்த களுகங்கை விவசாய அபிவிருத்தி செயற்திட்டம்** | |
| (i) | மொரகஹகந்த செயற்திட்டத்தின் கீழ் காணிகள் தனதாக்கலுக்காக 2012 – 2023 கால வரையறையுள் ரூபா 9,457.66 மில்லியன் தொகை பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களினால் நட்டஈடு செலுத்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், காணிகளை உரித்தாக்கும் அலுவல்களும் அதற்கு ஒத்ததாக தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்த ஒவ்வொரு செயற்திட்டத்தின் காணிப் பகுதிகளை உரித்தாக்கல், செயற்திட்ட அலுவல்களுக்காக அவற்றை பயன்படுத்தும் முறை மற்றும் தனதாக்கல் செய்முறை ஒவ்வொரு கட்டத்திற்கும் உரிய தகவல்கள் அறுதியாக இனங்காணக்கூடிய முறையில் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு, நாளதுவரையாக்கப்பட்ட கணனி மயமான தகவல் முறைமையொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | காணிகளை தனதாக்கும் கருமங்கள் மேற்கொள்ளப்படுவது தனதாக்கும் பிரதேசங்களுக்குரிய பிரதேச செயலாளர்களின் நேரடி தலையீட்டுடன் நடைபெறுவதுடன் அதற்குரிய உதவிகள் மற்றும் கூட்டிணைப்பு மாத்திரம் செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, தனதாக்கப்பட்ட காணிகளுக்குரிய சரியான தகவல்கள் அந்த பிரதேச செயலகங்களில் காணப்படுவதுடன், தனதாக்கல் சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளை செயற்படுத்தும் நடவடிக்கை முறையின் படி சரியான நபர்களுக்கு தவிர ஏனைய தரப்பினர்களுக்கு எக் காரணத்தினாலும் நட்டஈடு செலுத்துவற்கு முடியாது. மேலும், செயற்திட்டத்திற்காக சுமார் 20,000 காணித் துண்டுகள் தனதாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு காணித்துண்டுகளின் அடிப்படை கணினி தகவல்கள் முறைமையொன்று பேணிச்செல்வதற்கு இந்த கருமங்களின் தன்மையின் படி இயலாத கருமம் ஒன்றாகும். செயற்திட்டத்தின் மூலம் பேணிச் செல்ல வேண்டிய தரவு பதிவேடு கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக தனதாக்கப்பட்ட ஒவ்வொரு காணித்துண்டுக்குமாக தனதாக்கும் செய்முறை மற்றும் நட்டஈடு செலுத்தல் தொடர்பான விரிவான தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று பேணிச் செல்ல வேண்டும். காணிகளை தனதாக்கும் அலுவல்களுக்காக பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மூலம் செலுத்தப்படுகின்ற நட்டஈடுகள் தொடர்பாக அறிக்கைகள் அழைக்கப்பட்டு நட்டஈடு செலுத்தும் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ii) | காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 38(அ) மற்றும் 44 மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நடைமுறைகளை கடைபிடித்து நட்டஈடு செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகள் | காணிகள் தனதாக்கல் சட்டத்தின் படி அரசுக்கு தனதாக்கிய காணிகளின் உரிமை அரசுக்கு சொந்தமானது என பதிவு செய்யும் கருமம் குறிப்பிட்ட | காணி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | அரசுக்கு சொந்தமானது என பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அமைச்சும் இணைந்து மேற்கொள்ள வேண்டியதுடன், தற்போது அவை அரசுக்கு சொந்தமானதென பதிவு செய்வதற்கு தேவையான 38(அ) கட்டளை வழங்கும் படி காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான கட்டளைகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை. அந்த கட்டளைகள் கிடைத்த பின்னர் தனதாக்கல் சட்டத்தின் கீழ் அந்தக் காணிகள் அரசுக்கு சொந்தமானவை என பதிவு செய்தல் உரிய பிரதேச செயலாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. | திட்டமொன்று தயாரித்து அதன்படி செயற்பட வேண்டும். |
| (iii) | மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு ஆதனங்கள் தனதாக்கல் தொடர்பாக செயற்திட்ட அலுவலகத்தின் காணிப் பிரிவினால் 2022 ஆண்டு தயாரிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி 2022 ஆண்டு இறுதியளவில் லக்கல, நாவுல, மெதிரிகிரிய, கந்தளாய் மற்றும் எலஹர ஆகிய 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் 3833.45 ஹெக்டயருக்கான 16125 காணித் துண்டுகளை உரித்தாக்குவதற்காக ரூபா 9,457.66 மில்லியன் தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்தின் கொடுப்பனவு அறிக்கையின் படி 2022 ஆண்டு இறுதியளவில் 4450.93 ஹெக்டயர் காணியை உரித்தாக்குவதற்காக ரூபா 11,196.48 மில்லியன் தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, தகவல்கள் ஒன்றிற்கொன்று பொருந்தாமை காரணமாக சரியானது என உறுதிப்படுத்தப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | காணிப் பிரிவின் அறிக்கைகளின் படி மற்றும் கொடுப்பனவு அறிக்கையின் படி எண்ணிக்கைகளை இணக்கஞ் செய்து சரி செய்தல் மேற்கொள்ளல் வேண்டும். காணிகளை தனதாக்கல் அலுவல்களுக்காக பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்படும் ஏற்பாடுகளில் ஒவ்வொரு காணித் துண்டுகளுக்குமாக செலுத்தப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை தொடர்பான அறிக்கை அழைக்கப்பட்டு ஒவ்வொரு காணித் துண்டுக்குமாக செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை தொடர்பான விரிவான தகவல்களை உட்படுத்தப்பட்டு தரவு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | காணி உரித்தாக்கலுக்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கும் போது செயற்திட்டத்தின் சுற்றாடல் சார் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் 2015 ஜூலை 20 திகதிய அமப/15/1145/604/011 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மீள்குடியேற்ற அலுவல்களுக்காக ஹபுகஸ்பிட்டிய, ஓபல்கல மற்றும் களுகங்கை நீர்தேக்கங்கள் ஆகிய பிரதேசங்களில் 550 ஏக்கர் காணியை உரித்தாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அவற்றை உரித்தாக்கியிருக்கவில்லை. | எல்கடுவ, ஓபல்கம மற்றும் ஹபுகஸ்பிடிய பிரதேசங்களில் மாற்றுக் காணிகள் பெற்றுக்கொள்ளும் விருப்பம் தெரிவித்திருந்த குடும்பங்கள் இந்தப் பிரதேசத்தில் காணப்படாமையால் இந்த காணிகளை செயற்திட்டத்திற்காக தனதாக்கல் அர்த்தமற்றதாகையால் அந்த காணிகளை செயற்திட்ட அலுவல்களுக்காக பயன்படுத்தப்படவில்லை. களுகங்கை பிரிவின் செயற்திட்டத்திற்காக தனதாக்குவதற்கான கடமைகள் ஆரம்பிக்கப்பட்ட 50 ஏக்கர் காணி செயற்திட்டத்திற்கு தனதாக்குவதன் மூலம் மற்றும் அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு நலன்கள் வழங்கிய பின்னர் செயற்திட்ட அலுவல்களில் ஈடுபடுத்துவதற்கு காணிகள் மீதியாகக் காணப்படாமையால் அவற்றை தனதாக்கல் மூலம் அரசுக்கு ஏற்படுகின்ற நட்டத்தை கவனத்தில் எடுத்து தனதாக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | காணிகளை உரித்தாக்கல் மற்றும் தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கும் போது செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் சார் மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். |
| (v) | மொரகஹகந்த விவசாய அபிவிருத்தி செயற்திட்டத்தின் மீள் குடியேற்ற திட்டத்தின் பந்தி 5.1.5 படி மொரகஹகந்த செயற்திட்டத்தின் காரணமாக இடம்பெயரும் 302 குடும்பங்கள் மெதிரிகிரிய D வலயத்தில் குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டு அந்த வலயத்தில் நமடவெவ, தகம்வெவ மறறும் பண்டாரவெவ என புதிய 3 கிராமங்கள் மற்றும் பிசோபுர என் பிரதேச நிலையம் நிறுவுவதற்கும் அந்த கிராமத்தில் 2072 ஹெக்டயர் காணி 2680 விவசாய காணித் துண்டுகள் என மற்றும் 914 ஹெக்டயர் காணி 3350 வீட்டுத் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்குடியேற்றத்திற்காக பிரதேசங்களை இனங்காணும் போது முறைப் பிரகாரம் சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ள வேண்டும். செயற்திட்டத்தின் அடிப்படை திட்டங்களுக்கு புறம்பாக மேற்கொண்ட மீள்குடியேற்றம் காரணமாக அரச வளங்கள் துஷ்பிரயோகமாதல் மற்றும் குறைபயன்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | தோட்ட காணித்துண்டுகள் என அபிவிருத்தி செய்து குறிப்பிட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுப்பதற்கு இனங்காணப்பட்டிருந்தது. அங்கு மொரகஹகந்த களுகங்க நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி அலுவல்களின் கீழ் 2009 முதல் 2022 ஆண்டு வரை ரூபா 4,446.26 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் 7 காணித் துண்டுகள் மாத்திரம் மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்க நிர்மாண வேலையின் போது இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், மீதியான குடும்பங்களுக்கு நட்டஈடு செலுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்டிருந்த மீதியான காணித் துண்டுகளில் ஒரு பகுதி காணிக் கச்சேரி நடாத்தி மெதிரிகிரிய மற்றும் லங்காபுர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வதிவோருக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு பகுதி மேலும் பகிரவேண்டிக் காணப்பட்டது. அதன்படி, செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின் படி மீள்குடியேற்றுவதற்காக இனங்கண்டு நிறுவப்பட்டிருந்த கிராமங்கள் சேற்று வயல் நிலங்கள் மற்றும் அந்த கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுகாதார நிலையம், கூட்டுறவு நிலையம், பொதுச் சந்தை, சமூர்த்தி வங்கி, பஸ் தரிப்பிடம் மற்றும் ஏனைய பொது வசதிகள் கட்டிடங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்ட போதிலும் காணிகள் செயற்திட்டத்திற்கு புறம்பாக முறைசாரா விதமாக தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. | | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைபயன்பாட்டு கட்டிடங்கள் திட்டமிடப்பட்டு செயற்திட்டத்திற்கு பயன்படுத்த வேண்டும். |
| (vi) | இடம்பெயர்ந்த தரப்பினருக்கு வாழ்வாதார உதவி வழங்குவது உட்பட மீள்குடியேற்றும் அலுவல்கள் மற்றும் நிர்மாண வேலைக்காக காணிகள் உரித்தாக்கல் 2008 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை | பதிலளிக்கப்படவில்லை. | காணி உரித்தாக்கல், நட்டஈடு செலுத்தல் மற்றும் மீள்குடியேற்றல் ஆகிய அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டு |

| | |
|---|---|
| ரூபா 13,700 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் அலுவல்கள் 2017 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 5 வருடங்கள் தாமதமாக இருந்தமையால் காணிகளை உரித்தாக்கல் மற்றும் மீள்குடியேற்றம் தாமதம் அடைந்திருந்தது. | அதன்படி செயற்பட வேண்டும். |

**3.6 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **ஜின் நில்வளா திருப்பல் செயற்திட்டம்**<br><br>ஜின் நில்வளா திருப்பல் செயற்திட்டத்திற்காக 2014 நவம்பர் 05 திகதி நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு மற்றும் சீனாவின் CAMEC கம்பனி அ.டொ. 690,000,000 இற்கான EPC ஒப்பந்த உடன்படிக்கைக்கு அணுகியிருந்ததுடன், வேலை ஆரம்பிப்பதற்காக முற்பணம் ஒப்பந்த வேலைப் பெறுமதியின் 4.35 சதவீதமாகிய அ.டொ. 29,989,000 தொகை (ரூபா 4,011,054,982) செலுத்தப்பட்டிருந்தது. 2015 மே 26 திகதி நடைபெற்ற பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை துணைக் குழுவின் தீர்மானத்தின் படி செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான துணைக் குழுவினால் இந்த செயற்திட்டம் நில்வளா நதியை அண்டிய பிரதேசத்தில் மாத்திரம் மேற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதன்படி அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கும் | | |

| | | | |
|---|---|---|---|
| | படி ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்காமல் ஜின் கங்கை மற்றும் நில்வளா கங்கை ஆகிய 2 பகுதிகள் தொடர்பாகவும் ஆய்வு செய்வதற்கு 2017 ஜுலை 20 திகதி உடன்படிக்கை ஒன்றிற்கு அணுகி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தது. | ஜின் நில்வளா திருப்பல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோள் ஜின் மற்றும் நில்வளா ஆகிய ஆற்றுப் பள்ளத்தாக்கு இரு மருங்கிலும் காணப்படும் மேலதிக நீர் தென்கிழக்கு உலர் வலயத்திற்கு திருப்பி அனுப்புதல் ஆகக் காணப்பட்டதுடன் அங்கு கூடிய நீர் எண்ணிக்கையொன்று அதாவது திருப்பி அனுப்புவதற்று எதிர்பார்த்த 300 மில்லியன் கனமீற்றர் எண்ணிக்கையில் 200 மில்லியன் கனமீற்றர் எடுத்துச் செல்லக்கூடியதாக இருந்தது ஜின்கங்கை ஆற்றுப் பள்ளதாக்கிலிருந்தேயாகும். நில்வளா ஆற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படும் புவிச்சரிதவியல், நீரியல் மற்றும் பூகோல காரணிகளினால் இவ்வாறு திருப்பியனுப்பக்கூடிய நீரின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக நில்வளா கங்கையின் ஆற்றுப் பள்ளத்தாக்கின் நீர் மாத்திரம் திருப்பி அனுப்புதல் எவ்விதத்திலும் போதியளவாக காணப்படாததுடன், அதற்காக கணிசமான கிரயமொன்று மேற்கொள்ள நேரிடுவதால் நில்வளா கங்கையை சார்ந்ததாக மாத்திரம் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதன் மூலம் அது தொழில்நுட்ப ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவான செயற்திட்டமொன்றாக ஆகின்றது. அதன் காரணமாக ஜின் மற்றும் நில்வளா ஆகிய ஆறுகளின் ஆற்றுப் பள்ளத்தாக்கு இருமருங்கிலும் ஆய்வு அலுவல்கள் | செயற்திட்டத்தில் ஆரம்ப கட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய அங்கீகரித்தல் விடயங்கள் பூர்த்தி செய்யாமல் ஒப்பந்த உடன்படிக்கைக்கு அணுகுதல் மேற்கொள்ளக்கூடாத போதிலும் அதன்படி செயற்படாமல் உட்படிக்கைக்கு அணுகியிருத்தல் தொடர்பாக பொறுப்பான உத்தியோத்தர்களுக்கு எதிராக தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLVIII இன் பிரிவு 29 இன் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்தல் குறிப்பிட்ட கம்பனிக்கு சாட்டப்பட்டிருந்தது. | |
| (ii) | உடன்பட்டிருந்த நிபந்தனைகளின் படி 2016 நவம்பர் 09 திகதி முதல் 8 மாதங்களில் அதாவது 2017 ஜூலை 09 திகதி செயற்திட்டத்தின் முதலாம் கட்டம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த போதிலும் 2023 மார்ச் வரை 5 வருடங்களை மிகையான காலம் கால நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், நீடிக்கப்பட்ட கால இறுதியில் ஆரம்ப திட்டமிட்டல் கருமங்களில் 92.5 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 5 வருடங்களும் 4 மாதங்களும் கால தாமதம் அடைந்திருந்த போதிலும் முதலாம் கட்ட திட்டமிடல் அலுவல்களின் 7.5 சதவீதம் மாத்திரம் மேலும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | ஜின் நில்வளா திருப்பும் செயற்திட்டம் கட்டம் 1, அதாவது விரிவான அளவை நடவடிக்கைகள் மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் நீரியல் ஆய்வு, ஆழ புவித் துளைத்தல் மற்றும் புவி தொழில்நுட்ப ஆய்வு மேற்கொண்டு சாத்தியக்கூறு ஆய்வுகளை நாளதுவரை ஆக்கல் மற்றும் அடிப்படை திட்டங்களை பூர்த்தி செய்தல், உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி 2017 ஆகஸ்ட் 09 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அதற்காக காணப்பட்ட கடுமையான தடைகளினால் இதுவரை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. | செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் அடிப்படை கட்டங்களில் நிறைவேற்ற வேண்டிய கருமங்களை நிறைவேற்றாமல் ஒப்பந்த வேலைக்கான உடன்படிக்கைகள் அணுகக்கூடாது. அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 5 வருடங்களுக்குள் செயற்திட்ட பதவியணிச் சம்பளம், படி மற்றும் ஏனைய செயற்திட்ட அலுவல்களுக்காக ரூபா 27 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் அலுவல்கள் 7 வருடங்கள் தொடர்ச்சியாக தாமதமடைந்த காரணத்தினால் அது சிக்கனமற்ற மற்றும் மேலதிக செலவுப் பொறுப்பொன்றாக மாறியிருந்தது. | செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 15 ஆக காணப்பட்ட போதிலும், எச்சந்தர்ப்பத்திலும் முழுமையாக பதவியணியினர் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறைந்த பதவியணியினர் ஊடாக செயற்திட்டத்தின் அலுவல்களினை மேற்கொண்டிருந்ததுடன், அதன் மூலம் 2017 முதல் இதுவரை பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட ரூபா 27 மில்லியன் வரை வரையறுத்துக்கொள்வதற்காக இயலுமாக இருந்தது. மேலும், 2017 முதல் இதுவரை செயற்திட்டப் பணிப்பாளர் பதவிக்காக சம்பளம் ஏதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்டுள்ள பதவியணியினர் ஒப்பந்த அடிப்படை உடன்படிக்கையை நீடிப்பதற்கு முன்னர் செயலாற்றுகையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நிருவாகச் செலவினை முடிந்த அளவு குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | செயற்திட்டத்தின் திட்டமிடலுக்கான மொத்தக் கிரயம் 2014 ஆண்டில் செலுத்தியிருந்த போதிலும், திட்டமிடல் பூர்த்தி செய்திருக்காமையால் அது தொடர்பாக மேற்கொண்டிருந்த ரூபா 4,079,516,982 இற்கான கிரயத்தில் (2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது செலுத்தியிருந்த அ.டொ. 29,989,000 இற்கான முற்பணமும் உட்பட) 9 வருடங்களில் எதுவித பொருளாதார நலன்களும் கிடைத்திருக்கவில்லை. | இவ்வாறான தொழில்நுட்பம் போலவே சமூக மற்றும் சுற்றாடல் சார் சிக்கலான செயற்திட்டமொன்றின் ஆய்வு மற்றும் திட்டமிடல் கட்டத்தில் இதுவரை மேற்கொண்டிருந்த ஆய்வுகள் மற்றும் பரிசோதனைகள் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பயனொன்று காணப்படாதவை என நான் அவதானிக்கவில்லை. இவ்வாறான செயற்திட்டமொன்றின் ஆய்வு மற்றும் திட்டமிடலுக்காக மேற்கொள்ளப்படும் செலவுப் பொறுப்பு செயற்திட்டத்தை செயற்படுத்தப்பட்ட பின்னர் கிடைக்கக்கூடிய நலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தி ஒப்பீடு செய்தல் மிகவும் பொருத்தமானது என அவதானிக்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் ஆய்வு அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய காலநிலை மற்றும் பருவநிலை மாற்றத்தின் முன்னிலையில் மனித தேவைக்கு மிகவும் பயனளிக்கக்கூடியதாகும். | அரச நிதியம் துஷ்பிரயோகம் தொடர்பான முழுமையான விசாரணையொன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்டத்தின் மூலம் வழங்கக்கூடிய உச்ச மட்ட தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) | **மகவெலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்**<br><br>ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மேற்கூறிய செற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

(i) **செயற்திட்டத்தின் கட்டம் I**

| | | |
|---|---|---|
| இதன் கீழ் களுகங்கை நீர்த் தேக்கத்திலிருந்து மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு நீர் எடுத்துச் செல்வதற்காக 8.8 கி.மீ. நீளமான சுரங்கப்பாதை தோண்டும் ஒப்பந்த வேலை 2018 – 2021 காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்க டொலர் 21.79 மில்லியன் தொகை (ரூபா 3,349.74 மில்லியன்) மற்றும் இலங்கை ரூபா 3,797.17 மில்லியன் தொகை என மொத்தப் பெறுமதி ரூபா 7,146.91 மில்லியன் தொகைக்காக வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்படாமையால் 2022 ஜூன் 30 திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் நிகழ்ச்சித் திட்டத்தின் உசாத்துணை கம்பனி (Tractebel) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெளியிட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி துளைத்தல் அலுவல்கள் முழுமையாக பூர்த்தி செய்து மொத்த முன்னேற்றம் 82 சதவீதம் என காட்டப்பட்டிருந்துடன், 2022 ஆண்டில் நிர்மாண வேலை முன்னேற்றம் 12 சதவீதம் ஆகும். ஒப்பந்த வேலையின் விலை முரண்களுக்காக ரூபா 274.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 781.48 மில்லியன் தொகை அதற்காக செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலைகளின் நிர்மாண வேலைக் கிரயம் எதிர்காலத்தில் அமெரிக்க டொலர்கள் வரை 35 மில்லியன் (ஏரத்தாள ரூபா 9,383 மில்லியன்) அதிகரிக்கக் கூடும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். இந்த ஒப்பந்த வேலையின் நிர்மாண வேலைக் கிரயம் எதிர்காலத்தில் வரி இன்றி ரூபா 8,251 மில்லியன் மற்றும் வரியுடன் ரூபா 9,383 மில்லியன் தொகை என கணிக்கப்பட்டிருந்ததென குறிப்பிட விரும்புகின்றேன். | செயற்திட்டத்தை தாமதமின்றி பூர்த்தி செய்ய வேண்டும். விலைத் தளம்பல் தொடர்பாக கவனம் செலுத்தாமல் கால நீடிப்பு தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொண்டு தவறு ஏதும் ஏற்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்படின் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். |

(ii) **செயற்திட்டத்தின் கட்டம் 2 – வட மத்திய மஹா எல செயற்திட்டம்**

1. கட்டம் 2 இன் கீழ் வட மத்திய மஹா எல செயற்திட்டத்தின் மொரகஸ்கந்த நீர்த் தேக்கத்திலிருந்து நீர் எடுத்துச் செல்வதற்காக 27.7 கி.மீ. சுரங்கப் பாதை நிர்மாணிக்கும் ஒப்பந்தவேலை 2020-2027 காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்காக அமெரிக்க டொலர்கள் 106.09 மில்லியன் தொகை (ரூபா 18,893.17 மில்லியன்) மற்றும் இலங்கை ரூபா 21,179.97 மில்லியன் என மொத்தப் பெறுமதி ரூபா 40,073.14 மில்லியன் தொகைக்காக வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட கடன் உடன்படிக்கை 2018 மே 18 திகதி கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு 2½ வருட கால தாமதம் ஏற்பட்டிருந்தது.

2. ஒப்பந்த வேலையின் வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய நாள் 2027 மார்ச் 10 திகதி என திருத்தப்பட்டிருந்த போதிலும் 2025 ஜூன் 07 ஆந் திகதியில் உள்ளவாறு விரைவாக பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் சுரங்கம் துளைக்கும் இயந்திரத்திற்கு மேலதிகமாக 02 ஆவது சுரங்கம் துளைக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2021 ஒக்தோபர் 07 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி அமெரிக்க டொலர் 143.87 மில்லியன் தொகையும், இலங்கை ரூபா 20,541.94 மில்லியன் தொகையும் உட்பட ரூபா 46,164.31 மில்லியனுக்கான மொத்த

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். ஒப்பந்த வேலைக்குரிய 2023.04.30 திகதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 12% ஆகும். தற்போது சுரங்கத்தின் 780 மீற்றர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

செயற்திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக இரண்டாவது சுரங்கம் துளைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவைக்கு பிரேரணை சமர்ப்பிக்கும் போது மொத்த பொருளாதார முரண்கள் தொடர்பான போதியளவு பகுப்பாய்வு ஒன்று மேற்கொள்ளாமையால் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு அதன்படி பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு அணுக வேண்டும்.

பெறுமதிக்கு ஆரம்ப ஒப்பந்த வேலை திருத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் ரூபா 6,690.97 மில்லியனுக்கு இரண்டாவது சுரங்கம் துளைக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்து 2022 ஒக்தோபர் மாதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

3. பின்னர் நாட்டில் நிலவிய பொருளாதார வீழ்ச்சி மற்றும் மேலதிக நிதியம் விரைவாக பெற்றுக் கொள்ள முடியாதமையால் தற்போது காணப்படும் அமெரிக்க டொலர்கள் 69.5 மில்லியன் (சுமார் ரூபா 22,240 மில்லியன்) ஏற்பாடுகளில் ஒரு சுரங்கம் துளைக்கும் இயந்திரத்தை மாத்திரம் பயன்படுத்தி ஒப்பந்த வேலையை 2024 ஜூன் வரை நடாத்திச் செல்வதற்கும் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சுரங்கம் துளைக்கும் இயந்திரம் 2024 மார்ச் வரை செயற்படுத்தாமல் இருப்பதற்கும் 2023 ஏப்ரல் 03 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒட்டு மொத்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது என மற்றும் தொடர்செயல் நடவடிக்கைகளும் நிச்சயமற்ற கட்டத்தில் காணப்படுகின்றமையால் 21 ஒப்பந்த வேலை பெக்கேஜ்களை கொண்ட இந்த செயற்திட்டம் தொடர்பான பொருத்தமான மாற்றுச் செய்முறை தயாரிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ளது எனவும், அந்த திணைக்களத்தினால் பிரேரிக்கப்பட்ட மாற்று செயற்முறை தேசிய செயற்பாடு கூடத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பரிந்துரைப்பதெனவும் குறிப்பிட்டுள்ள இந்தப்

பரிந்துரையை செயற்படுத்துவதற்காக 2023 ஏப்ரல் 03 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

4. ஒப்பந்த வேலை ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்திருந்த மீளாய்வாண்டு இறுதியளவில் உசாத்துணை கம்பனி (Tractebel) வெளியிட்டிருந்த 2022 முன்னேற்ற அறிக்கையின் படி நிர்மாணவேலை முன்னேற்றம் 10 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டுள்ளதுடன், சுரங்க பாதை 50 மீற்றர் தூரம் அளவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த வேலையில் நிர்மாண வேலைக் கிரயம் எதிர்காலத்தில் அமெரிக்க டொலர்கள் 240.30 மில்லியன் (ரூபா 86.508 மில்லியன்) வரை அதிகரிக்கக் கூடும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) **செயற்திட்டத்தின் கட்டம் 2 – வடமேற்கு மஹா எல செயற்திட்டம்**

1. வடமேற்கு மஹா எல செயற்திட்டத்தின் கீழ் மஹகிதுல, மஹகிருள 02 நீர்த் தேக்கங்கள் மற்றும் அதனிடையே அதுஎல சுரங்கப் பாதை நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலை 2020-2024 காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு அமெரிக்க டொலர்கள் 30.21 மில்லியன் (ரூபா 5,386.64 மில்லியன்) மற்றும் இலங்கை ரூபா 4,591.84 மில்லியன் தொகை உட்பட மொத்தப் பெறுமதி ரூபா 9,978.48 மில்லியன் இற்காக சீனாவின் CAMEE-QMCG-JV வெளிநாட்டுக் கம்பனிக்கு 2020 ஆண்டு

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றேன். போதியளவு முன்னேற்றம் ஒன்று பெற்றுக் கொள்ளாமையினால் ஒப்பந்த வேலை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இடைநிறுத்தல் ஒப்பந்தகாரரினாலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் முற்பண பிணை முறிக்குரிய தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கு ஒப்பந்தகாரர் இணங்கியிருந்தார். அதன்படி முற்பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 389,321,808 இற்கான தொகை மற்றும் அமெரிக்க டொலர்கள் 4,531,291.55 இற்கான பெறுமதியினை

உடன்பட்ட காலப் பகுதியுள் செயற்திட்டத்தை செயற்படுத்தவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த திட்டத்திற்கு இணங்க செயற்படாமை தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு அறிவித்து தாமதத் தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் ஒப்பந்த கம்பனியின் பதவியணியினர் பற்றாக்குறை, நிர்மாணவேலை உபகரணங்கள் காணப்படாமை மற்றும் பலவீனமான வேலைத்தள முகாமைத்துவம் காரணத்தினால் 02 வருட காலப் பகுதியில் நிர்மாணித்தல் முன்னேற்றம் உசாத்துணை கம்பனி (Tractebel) வெளியிட்டிருந்த 2022 முன்னேற்ற அறிக்கையின் படி 2.97 சதவீத மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

2. இதன் காரணமாக ஒப்பந்த வேலையை இரத்துச் செய்வதற்காக செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் ஒப்பந்தக்காரருக்கு வேலை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த முற்பணம் என ரூபா 1,179.32 மில்லியன் மற்றும் முடிவுற்ற வேலைகளுக்காக ரூபா 355.24 மில்லயின் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இந்த ஒப்பந்த வேலையின் நிர்மாண வேலைகள் அமெரிக்க டொலர் 48.9 மில்லியன் கிரயத்தில் (அண்மித்த ரூபா 17,604 மில்லியன்) வரை அதிகரிக்கக் கூடும் என 2021 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(iv) **கட்டம் 2 - விவசாயப் பண்டங்கள் கொள்வனவு செய்தல்**

கட்டம் 2 இன் கீழ் பிரதான நிர்மாணவேலை ஒப்பந்த வேலைகள் 02 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த அமெரிக்க டொலர்கள் 140.47 மில்லியன் தொகையில் அமெரிக்கன் டொலர்கள் 39 மில்லியன் தொகை மேலும் பல விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து அமெரிக்க டொலர்கள் 11 இரசாயன உரம் பெறுகைக்காக மாத்திரம் அங்கீகாரம் வழங்கி අමප/22/1517/623/016/டீபீஆர் மற்றும் 2022 ஒக்தோபர் 03 திகதிய அமைச்சரவை பத்திரத்தின் படி இறக்குமதி செய்யப்பட்ட MOP இரசாயன உரம் 41.876 மெற்றிக் தொன்கள் இருப்பொன்று 2022 திசெம்பர் 05 திகதி துறைமுகத்தில் விவசாய அறிவிக்கப்பட்டிருந்த பற்றாக்குறை தொடர்பாக முறையான விசாரணை ஒன்று அமைச்சினால் மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று

| | | |
|---|---|---|
| மில்லியன் தொகையாக கூட்டுத்தொகை அமெரிக்க டொலர் 50 மில்லியன் விவசாய பண்டங்கள் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவற்றில் அமெரிக்கன் டொலர்கள் 39.78 மில்லியன் தொகை (ரூபா 14,202 மில்லியன்) செலவிடப்பட்டு 2022/2023 பெரும்போக நெற்பயிர்சைக்காக MOP இரசாயன உரம் 41.876 மெற்றிக் தொன்கள் கொள்வனவு செய்து உர இருப்பு 2022 திசெம்பர் 05 திகதி விவசாய அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த உரம் 50 கிலோகிராம் பொதிகளில் பொதிசெய்யப்பட்டு விவசாய அமைச்சு சார்பாக அரசுக்கு சொந்தமான 02 உரக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் துறைமுகத்தில் மேற்கொண்டிருந்த ஒப்படைப்பின் போது ரூபா 55.233 மில்லியன் பெறுமதியான 3,230 உரப் பொதிகளுக்கான பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. | அமைச்சுச் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. உர வினியோக அலுவல்கள் விவசாய அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(v) **செயற்திட்டத்தின் கட்டம் 3**

| | | |
|---|---|---|
| 1. செயற்திட்டத்தின் 3 ஆவது கட்டத்தின் கீழ் வடமத்திய மஹா எல செயற்திட்டம், வடமேல் மாகாண மஹாஎல செயற்திட்டம் மற்றும் மினிப்பே இடது கரை கால்வாய் மறுசீரமைத்தல் ஆகிய செயற்திட்டங்களுக்காக அமெரிக்க டொலர் 93 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலமும் அமெரிக்கன் டொலர் 36 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தினாலும், அமெரிக்க டொலர் 114 மில்லியன் தொகை ஏனைய வெளிநாட்டு மூலவளங்கள் மூலமும் பெற்றுக் கொள்வதற்கு | சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து விடயங்களுடனும் இணங்குகின்றேன். | நிதிய மூலவளம் தொடர்பாக தீர்மானம் ஒன்று பெற்றுக்கொள்ள முன்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படக் கூடாது. |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. அமெரிக்கன் டொலர் 675 மில்லியன் தொகைக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மொத்த செயற்திட்டத்தின் பெறுமதி அமெரிக்க டொலர் 976 மில்லியன் வரை அதிகரிக்கக் கூடும் என 2021 ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| 2. கட்டம் 3 இன் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 09 ஒப்பந்த வேலை பெக்கேஜ்களில் 06 ஒப்பந்த வேலை பெக்கேஜ்களுக்காக கட்டம் 2 இன் கீழ் கிடைத்திருந்த ஏற்பாடுகளில் ரூபா 1,708,486 தொகை செலவிடப்பட்டு ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 3 ஆம் கட்டத்திற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் ஒப்பந்த வேலையை செயற்படுத்தப்பட்டு இருக்காமையால் பெறுகை அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,708,486 இற்கான செலவு விளைவற்ற செலவொன்றாக மாறி இருந்தது. | 2024.12.31 திகதியளவில் அலுவல்களை பூர்த்தி செய்யும் அடிப்படையில் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார பின்புளத்தின் மீது 3 கட்டங்களுக்காக கடன் வழங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி பிற்போடல் காரணமாக ஒப்பந்த வேலையை வழங்குவதற்கு முடியாமல் போனது. | நிதிய மூலவளம் தொடர்பாக தீர்மானம் ஒன்று பெற்றுக்கொள்ள முன்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படக் கூடாது. |
| (இ) **காலநிலை தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டம்** | | |
| காலநிலை தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டம் (CRIP) ஏற்பாடுகளின் கீழ் 2021 ஆண்டு வரை ரூபா 430 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 06 சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன்கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி அமைச்சினால் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டு இருக்கவில்லை. | பதில் அளிக்கப்படவில்லை. | சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டுள்ள செயற்திட்டங்கள் முக்கியத்துவத்தின் படி திட்டமிடப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

(ஈ) **வெவ்கம புபுதுவ செயற்திட்டம் / காலநிலை மாற்றங்களுக்கு இணைவாகக்கூடியவாறு ஒன்றித்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்திற்காக பசுமை காலநிலை நிதியம் (GCF) கடந்த 06 வருடங்களுக்குள் ரூபா 6,650.66 மில்லியனிற்கு சமமான அ.டொ. 30.01 மில்லியன் தொகை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு (UNDP) வழங்கியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதி அளவில் ரூபா 1,465.15 மில்லியனுக்கு சமமான அ.டொ. 7.99 மில்லியன் தொகை மாத்திரம் மஹவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு (MMDE) வழங்கியிருந்தது. வழங்கியிருந்த மொத்தத் தொகையில் 22 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்தக் கூடியவாறு மேற்கூறிய தொகைக்காக மாத்திரம் செயற்திட்டத்தினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி நிலைமை அதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | வெவ்கம் புபுதுவ செயற்திட்டம்<br>• இந்த செயற்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் (VOTE No 13 & 17) ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றது. அதன்படி, செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை திறைசேரிக்கு அறிவித்து குறிப்பிட்ட ஏற்பாடுகளின் கீழ் கட்டுநிதிகள் பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது.<br>• அதன்படி செயற்திட்டத்தின் வருடாந்த இறுதிக் கணக்குகள் அந்த ஏற்பாடுகளின் மூலம் கிடைத்திருந்த பணத்திற்கு ஒப்பாக மேற்கொள்ளப்படும் செலவுகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பசுமை காலநிலை நிதியத்திலிருந்து செயற்திட்டத்திற்காக பணம் வழங்குவது அதன் முகவராண்மையான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஊடாகவே ஆகும்.<br>• அமைச்சு மற்றும் அந்த நிறுவனம் இடையே மேற்கொண்டிருந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தும் உடன்படிக்கை மீது பசுமை காலநிலைசார் நிதியத்தினால் செயற்திட்டத்திற்காக வழங்கப்படும் ஏற்பாடுகள் அவர்கள் தடுத்து வைத்து செலவிடப்படுவதுடன், | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி நிலைமையை சித்தரிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | மீதியான ரூபா 5,185.51 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 22.01 மில்லியன் தொகையில் செயற்திட்டத்தின் சில அலுவல்கள் மேற்கொள்வதற்காக UNDP இனால் ரூபா 2,776.61 மில்லியனுக்கு சமமான அமெரிக்க டொலர் 13.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, அ.டொ. 8.07 மில்லியனிற்கு சமமான ரூபா 2,408.9 மில்லியனிற்கான செலவுகள் தொடர்பாக தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | | - மேற்படி - |
| (iii) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மேற்கூறிய செயற்திட்டத்தின் | அமைச்சின் செயற்திட்ட அலகுகள் செயற்படுத்தும் | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செலவுகள் அடங்கக்கூடியவாறு |

| | | | |
|---|---|---|---|
| | அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் வரையறையை மிகைத்து 2020 ஆண்டில் ரூபா 470 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டில் ரூபா 103 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்ட கருமங்களுக்காக உரிய நிதி மாத்திரம் திறைசேரிக்கு வழங்கப்படுகின்றது.<br>• எவ்வாறாயினும், அமைச்சுச் செயலாளரினால் திறைசேரி வெளிநாட்டு மூலதனத் திணைக்களம் (ERD) திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 30/01/2022 கடிதத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்கு உரிய முறையில் நிதி வழங்குவதற்கும் UNDP நிறுவனத்தினால் செலவிடப்படும் பணம் தொடர்பாக அனைத்துத் தகவல்களும் திறைசேரிக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பணம் வழங்கல் மேற்கொள்ளப்படுவதுடன், UNDP நிறுவனத்தினால் கடந்த ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டியதுடன், ஏற்பாடுகளின் வரையறையை மிகைத்து செலவுகள் மெற்கொள்ளக்கூடாது. உதவி உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை அரசின் பங்களிப்பு மேற்கொள்ள வேண்டும். |
| (iv) | பசுமை காலநிலைசார் நிதியத்துடன், இலங்கை அரசாங்கம் கையொப்பமிட்டிருந்த உதவி உடன்படிக்கையின் படி இலங்கை அரசின் பங்களிப்பு 15 சதவீதமாகும். இந்த செயற்திட்டத்தின் கீழ் திறைசேரிக்கு 2017 முதல் 2022 வரையான காலப் பகுதியில் ரூபா 1,465 மில்லியன் தொகை கிடைத்திருந்ததுடன், இலங்கை அரசின் பங்களிப்பு என ரூபா 1,423 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, செயற்திட்டத்தின் மூலம் மீளளிப்பு செய்யப்பட்ட தொகைக்கு அண்மித்த தொகையொன்று அரசாங்கத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | வெளிநாட்டுக் கடன் எதிர்பார்ப்புடன் EPC ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் அமெரிக்க டொலர்களின் மூலம் கொடுப்பனவு செய்யும் நிபந்தனைகளை உட்படுத்தி ஜின் நில்வளா திருப்பும் செயற்திட்டம், உமாஓயா பல்கரும அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் நிலக்கீழ் நீர் ஆய்வுத் தகவல்கள் இணையத்தளமொன்று நிறுவுதல் ஆகிய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பல்வேறு காரணங்களினால் எதிர்பார்த்தவாறு வெளிநாட்டு நிதியம் கிடைத்திருக்காத போதிலும், அவற்றை உள்நாட்டு நிதியத்தை பயன்படுத்தி செயற்படுத்தியிருந்தது. வெளிநாட்டு நிதியம் | பதிலளித்திருக்கவில்லை. | இலங்கையில் ஒப்பந்த வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டியது ரூபா மூலமாக இருந்த போதிலும், டொலர்களின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கு இணங்கி உடன்படிக்கை மேற்கொண்டிருத்தல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாட்டு நிதியம் கிடைக்கப் |

| | | |
|---|---|---|
| கிடைக்கப்படாவிடினும், ஒப்பந்த வேலைக்காக அமெரிக்க டொலர்களின் மூலம் கொடுப்பனவு செய்வதற்கு நேரிட்டிருந்தமையால் நாட்டில் வெளிநாட்டு ஒதுக்கத்திற்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பாக போதியளவு மதிப்பாய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | | பெறாமை மற்றும் டொலர்கள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளல் தொடர்பாக அமைச்சரவையை அறிவுருத்தி ரூபாக்கள் மூலம் செலுத்தக்கூடியவாறு உடன்படிக்கைகளை திருத்த வேண்டும். |

## 3.7 உள்நாட்டு நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஆக்கவளத்தன்மை மேம்பாடு மற்றும் நீர்ப்பாசன முறைமை செயற்திறனை அபிவிருத்தி செய்யும் செய்திட்டம்** | | |
| (i) | இந்த செயற்திட்டம் 2017 – 2021 காலப் பகுதியில் ரூபா 18,500 மில்லியனிற்கான கிரயத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டவுடன் அதற்காக அபிவிருத்தித் தரப்பினரிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளும் படி அமைச்சரவையினால் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் 17/0190-729/003 கொண்ட “ஆக்கவளத்தன்மையை அதிகரித்தல் மற்றும் நீர்பாசன முறைமையின் செயற்திறனை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்” என்ற தலைப்பில் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2017.01.23 திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய 2017.02.22 தீர்மானத்தின் (iii) இன் மூலம், இந்த செயற்திட்டத்திற்காக அபிவிருத்தித் தரப்பினர்களிடம் நிதியம் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளும் படி, வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சாட்டும் படி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் | அமைச்சரவையினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி உதவிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து நிதியம் பெற்றுக்கொள்வற்கு நடவடிக்கை எடுக்காமல் திறைசேரி ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சுச் செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | |
| (ii) | இதற்காக 2017 முதல் 2022 வரை ரூபா 2,978.85 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 1,730.99 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையின் படி செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றுகை 10 சதவீதமாக காணப்பட்டது. அவ்வாறு இருக்கும் போது 2023 ஆண்டு முதல் தொடர்ந்தும் செயற்திட்டத்தை செயற்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்ட கிரயத்தின் கூடிய பகுதியொன்று செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் சம்பளம், படிகளுக்காகவும் செயற்திட்ட அலுவலகத்தை பேணிச் செல்லல் மற்றும் பராமரிப்பு அலுவல்களுக்காகவும், எரிபொருள் மற்றும் பிரயாணச் செலவு உட்பட நிருவாகச் செலவுகளுக்காகவும் மேற்கொண்டிருந்ததுடன், அதன் காரணமாக பௌதீக செயலாற்றுகை குறைந்து காணப்பட்டது. | இயலுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் கிடைத்திருந்த ஏற்பாடுகளின் படி பதவியணியினரை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2018,2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது சேர்க்கப்பட்டிருந்த பதவியணியினரும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் சதவீதமாக கணித்த போது முறையே 59 சதவீதம் மற்றும் 65 சதவீதமாகும். 2021 ஆண்டு முதல் பதவியணியினர் 06 பேராக வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அத்தியவசியமான விடயங்களுக்காக மாத்திரம் இந்த உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக முக்கியத்துவம் வழங்கி குறைந்த செயற்திட்ட பதவியணியினர் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கும் நிருவாகச் செலவுகளை குறைத்துக்கொள்வதற்கும் இயலுமான வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன்படி செயற்பட வேண்டும். ஊழியர்களின் வருடாந்த சேவை நீடிப்பு வழங்கும் போது செயற்திட்டத்தின் செயலாற்றுகை மீது கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | **கிராமத்துடன் ஒன்றுகூடல் நிகழ்ச்சித்திட்டம்**<br><br>மேற்கூறிய நிகழ்ச்சித் திட்டம் 5 மாவட்டங்களில் செயற்படுத்துவதற்காக 2021 ஆண்டில் 6 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,616 மில்லியன் தொகையும், 2022 ஆண்டில் ரூபா 610.14 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | செலவு விடய இலக்கம் 198-02-03-52-2506(II) நீர் சௌபாக்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆண்டிற்காக ரூபா 610.14 மில்லியன் தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஏற்பாடுகளில் ரூபா 208.53 மில்லியன் தொகை நி.பி. 20(1) ஏற்பாடுகளுக்கு இணங்க வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காததுடன், கிராமத்துடன் ஒன்றுகூடல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நி.பி. 20(1) ஏற்பாடுகளுக்கு இணங்க வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்ளாமல் புதிய செயற்திட்டங்கள் செயற்படுத்தக்கூடாது. |
| (ii) | அனுராதபுர மாவட்டத்தில் கெபிதிகொல்லாவ பிரதேச செயலகப் பிரிவில் பதவிய மற்றும் வாஹல்கட விவசாய திட்டங்களில் கால்வாய் முறைமை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 116 மில்லியன் தொகைக்கான 2 மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த மதிப்பீடுகளுக்குரிய வேலைப் பகுதிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட சரலைக் கற்கள் எண்ணிக்கையை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து அனுமதிப்பத்திரம் பெற்று தோண்டி எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் தனியார் வழங்குனர்களிடம் கொள்வனவு செய்து அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | நீர்பாசனத் துறையின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி அலுவல்களுக்குத் தேவையான மண் மற்றும் சரலை அரச காணிகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக உரிய வரிசை அமைச்சுடன் தொடர்பு ஏற்படுத்தி முறையான மேலைத்திட்டமொன்று தயாரித்துக்கொள்ள வேண்டும். |
| (iii) | பயிர்செய்கை நிலங்களுக்காக நீர் வழங்கல் நீர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்குத் தேவையான 2411 கியும் குழாய்கள் கொள்வனவு செய்து அவற்றில் 1017 விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன்மூலம் எதிர்பார்த்தவாறு நீர் வழங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. 1394 கியும் குழாய்கள் பதவிய | பதிலளிக்கப்படவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட குழாய்களை பயன்படுத்தி எதிர்பார்த்த நீர் வழங்களை விரைவாக நிர்மாணித்து அறிவிக்க வேண்டும். செயற்திட்ட கருமங்கள் முறையான திட்டமொன்றுடன் நிறைவேற்றப்பட வேண்டியதுடன், ஏற்பாடுகள் சிறந்த |

| | | | |
|---|---|---|---|
| | நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் குவிக்கப்பட்டு காணப்பட்டது. | | முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |
| (iv) | நி.பி. 20(1) ஏற்பாடுகளுக்கு இணங்க ஏற்பாடுகள் ஒதுக்கிக்கொள்ளாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்த மேற்கூறிய (ஆ)(ii) மற்றும் (iii) செயற்திட்டங்களுக்காக 2023 ஆண்டிற்காக ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் இடை நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் விளைவற்றதாக இருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | முக்கியத்துவ அடிப்படையில் செயற்திட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்காக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீர்ப்பாசன அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பாக மோட்டார் வாகனத் திணைக்களத்தின் தரவு முறைமையின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களின் படி நீர்ப்பாசன அமைச்சு, நீர்ப்பாசனச் செயலாளர் அல்லது அமைச்சு முகவரியின் கீழ் 650 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நீர்ப்பாசன அமைச்சின் வாகனப் பதிவேட்டின் படி அமைச்சுக்கு சொந்தமான மற்றும் பயன்படுத்தப்படும் வாகன எண்ணிக்கை 306 ஆக காணப்பட்டது. அதன்படி, 347 வாகனங்கள் அமைச்சின் பொறுப்பில் காணப்படவில்லை. | 650 வாகன எண்ணிக்கையொன்று இந்த அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு என்பன பிரியும் போது அந்த வாகனங்களின் பகுதியொன்று அந்த அமைச்சுக்களுக்கு வழங்கப்பட்டது. அது தவிர நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகவெலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு ஆகிய நிறுவனங்களுக்கும் வாகனங்களில் ஒரு பகுதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மொரகஹகந்த களுகங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு இந்த அமைச்சிற்கு எடுத்து வரப்பட்ட 72 வாகனங்களும் இந்த அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட போதிலும் அந்த வாகனங்கள் அந்த செயற்திட்டத்தின் மூலம் பயன்படுத்தப்படுகின்றது.<br>உமாஓயா செயற்திட்டம், CResMPA மூலம் | அமைச்சன் பொறுப்பில் கணப்படாத வாகனங்களை ஒவ்வொன்றாக இனங்காணல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை சட்டரீதியாக உரித்தாக்கி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வாகனங்கள் தொடர்பாக தரவு முறைமையொன்று பேணிச் செல்ல வேண்டும். 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38(1) இன் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வாண்டின் போது வாகனக் கட்டுப்பாட்டுக்காக புதிய கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்தப்படும் வாகனங்கள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு முறைப்பிரகாரம் ஒப்படைக்கும் அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய நட்டங்கள் மற்றும் கைவிடல் கூற்றில் தொடர்ந்தும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உரிய வாகன விபத்துக்கள் 4 உடன் தொடர்புடைய கூட்டுத்தொகை 12,189,753 தொகை காணப்பட்டதுடன், அவற்றில் 2 வாகன விபத்துக்கள் மூலம் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 11,716,700 தொகை 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காப்புறுதி நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. மேற்கூறிய வாகனங்களின் நட்டம் பரிந்துரையின் படி குறிப்பிட்ட சாரதிகளிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மொரகஹகந்த - களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு சொந்தமான WP PG 0456 கொண்ட டொயோடா டபல் கப் வண்டி 2021.10.22 திகதி விபத்துக்குள்ளாதல் தொடர்பாக நி.பி. 104(4) இன் படி குற்றவாளியாக காணப்பட்ட என். டபில்யூ. விஜித பண்டார விஜேதுங்க அவர்களிடம் ரூபா 10,428,500 தொகையாகிய நட்டத் தொகையை அறவீடு செய்வதற்காக செயற்திட்டப் பணிப்பாளரினால் அவருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அதற்காக பதிலொன்று கிடைத்திருக்கவில்லை.<br>குறிப்பிட்ட கோவை சட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>PB 4434 இலக்கம் கொண்ட கப் வண்டி 2019.02.28 திகதி விபத்துக்குள்ளாதல் தொடர்பாக விசாரணை சபையின் அறிக்கையின் படி வாகனத்தின் சாரதியாகிய டப்லியூ.ஏ.எம்.டீ.டப்லியூ. பண்டார அவர்களால் முழுமையாக பொறுப்புச் சொல்லப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br>அதன்படி, தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கும் படி அறிவித்து அமைச்சின் சட்ட உத்தியோகத்தருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டி தரப்பினர் என இனங்கண்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளில் இருந்து உச்ச மட்ட எண்ணிக்கையை அறவீடு செய்ய வேண்டும்.<br>மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொரகஹகந்த நீர்த் தேக்க பிரதான அணைக்கட்டு நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நான்கு மின் உற்பத்தி இயந்திரங்கள் பொருத்துவதற்காக அமெரிக்க டொலர்கள் 10,937,960 தொகை மிகையாக செலுத்துதல்<br><br>மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் பிரதான அணைக்கட்டு நிர்மாணிக்கும் ஆரம்ப உடன்படிக்கையின் விடயப் பரப்பு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 2013 பெப்ரவரி மாதம் திருத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 2016 நவம்பர் 23 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16/2513/704/067 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் செயற்திட்டத்தின் ஆரம்ப விடயப் பரப்பு மாற்றமடைந்த காரணத்தினால் EPC/Turnkey ஒப்பந்தக்காரருக்கு அமெரிக்க டொலர் 10,937,960 தொகை செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டு அதற்காக அங்கீகாரம் வேண்டியிருந்தது. அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி செயற்திட்டத்தின் ஆரம்பத்திட்டத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 5 மெகா வொட் கொண்ட 2 மின் பிறப்பாக்கிகள் மற்றும் 15 மெகா வொட் கொண்ட 1 மின் பிறப்பாக்கி ஆக 3 மின் பிறப்பாக்கிகள் மூலம் 25 மெகா வொட் உற்பத்தி செய்யக் கூடிய மின் வலு நிலையத்திற்கு பதிலாக 5 மெகா வொட் கொண்ட 2 மின் பிறப்பாக்கிகள் மற்றும் 7.5 மெகா வொட் கொண்ட 2 மின் பிறப்பாக்கிகளாக 4 மின் பிறப்பாக்கிகள் மூலம் 25 மெகா | மொரகஹகந்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டம் மேற்கொள்ளப்பட்டது இலங்கை மகவெலி அதிகார சபையினாலே ஆகும். 2007 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் 2013 ஆண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகொன்று (PMU) நிறுவப்பட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த செயற்திட்டத்தின் அடிப்படை குறிக்கோளாக காணப்பட்டது விவசாயத்துக்குரிய நீர் தேவையான பிரதேசங்களுக்கு வழங்குவதாக காணப்பட்டதுடன், அங்கு வெளியிடப்படும் நீர் மின்சக்தி உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடியதாக காணப்பட்டமையால் அதற்காக மின்பிறப்பாக்கிகள் உட்படுத்தப்பட்டு திட்டமிடப்பட்டது. அமப/16/2513/704/067 மற்றும் 2016 திசெம்பர் 07 திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி இந்த சிறு நீர் மின் வலு நிலையம் (Mini Hydro Station) என பேணிச் செல்வதற்காக தீர்மானிக்கப்பட்டது. எனினும், 10 மெகா வொட் ஐ விட கூடிய இயந்திரங்களின் உரிமை இலங்கை மின்சார சபைக்கு உரித்தாவதனால் அந்த 15 மெகா வொட் இயந்திரம் 7.5 மெகா வொட் இரண்டு இயந்திரங்களாக மாற்றப்பட்டது. இந்த மாற்றத்தினால் மின் வலு நிலையத்தில் ஏற்பட்டிருந்த வித்தியாசம் காரணமா இந்த தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த நேரிட்டிருந்தது. செயற்திட்டத்தின் திட்டமிடல் | நிதியமைச்சரின் அவதானிப்பு மற்றும் அமைச்சரவைகள் தீர்மானத்தின் படி செயற்திட்டத்தின் பலவீன திட்டமிடல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக நியமன அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தை வினைப்படுத்தும் முகவராண்மை நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்ய வேண்டியதுடன், நேரிட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். செயற்திட்டமொன்று திட்டமிடல் கட்டம் முதல் இறுதிக் கட்டம் வரை பல்வேறு செயற்பாட்டு அலுவல்களுக்காக தொடர்புபட்டிருந்த அனைத்து பிரிவுகளுடனும் சிறந்த தொடர்பாடலுடன் ஒவ்வொறு கட்டங்களையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வொட் உற்பத்தி செய்யும் மின் வலு நிலையம் நிர்மாணிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2016 நவம்பர் 29 திகதி அமப/16/2513/704/067 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி அதற்காக அங்கீகாரம் வழங்கும் போது ‘‘நிதியமைச்சரின் அவதானிப்புக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த விடயங்கைள கவனத்தில் எடுத்து அதன்படி செயற்படுகின்ற’’ என மகவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுச் செயலாளருக்கு விதிக்கப்பட்டிருந்தது. அங்கு ‘‘10 மெகா வொட் கூடிய மின் வலு நிலையங்களை செயற்படுத்தும் அதிகாரம் இலங்கை மின்சார சபைக்கு மாத்திரம் சொந்தமாக காணப்படுவதனால் 15 மெகா வொட் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை செயற்படுத்துவற்கு மகவெலி அபிவிருத்தி அமைச்சுக்கு அதிகாரம் காணப்படவில்லை என பின்னர் கண்டறியப்பட்டமையால் செயற்திட்டத்தின் விடயப் பரப்பை மாற்றுவதற்கு மற்றும் ஒப்பந்த வேலையின் முரண்களுக்கு காரணமாக உள்ளது எனவும், பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு முன்னர் இலங்கை மின்சார சபையிலிருந்து இது தொடர்பாக தேவைப்படும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் வரிசை அமைச்சின் பொறுப்பொன்றெனவும், செயற்திட்டத்தின் விடயப்பரப்பை தீர்மானிக்க முன்னர் இந்த செயற்திட்டத்தின் திட்டத்திற்கு தரப்பினர் ஒருவரான இலங்கை மின்சார சபை அறிவுரை பெற்றுக்கொள்ளாமைக்காக வரிசை அமைச்சு உத்தியோகத்தர்கள் பொறுப்புச் சொல்ல வேண்டும் எனவும்’’ நிதியமைச்சர் அவதானிப்பு மேற்கொண்டிருந்தார். அவ்வப்போது பல்வேறு இடங்களினால் அதாவது இலங்கை மகவெலி அதிகார சபை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு, மகவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அதற்குரிய அனைத்துத் தகவல்களும் ஒரு இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் வசதியீனங்கள் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும், நிதியமைச்சரின் அவதானிப்பை செயற்படுத்தாமல் மேலதிக கொடுப்பனவு மாத்திரம் மேற்கொண்டிருந்ததுடன், மேலதிகமாக மேற்கொள்ள நேரிட்டிருந்த அமெரிக்க டொலர் 10.94 மில்லியனிற்கான செலவு அரசுக்கு ஏற்பட்டிருந்த நட்டமாகும். அதன்படி, அமைச்சரவையின் தீர்மானத்தின் படி செயற்திட்டத்தின் பலவீன திட்டமிடல் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உரிய நியமன அதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டிக் காணப்பட்ட போதிலும் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 2.2 பந்தியின் படி செயற்திட்டம் முடிவடைந்த பின்னர் அதன் பிரதான அணைக்கட்டு மற்றும் மின்சார முறைமை நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிருவகித்து, இலங்கை அரசு சார்பாக உற்பத்தி செய்ய வேண்டியதுடன், உற்பத்தி செய்யும் மின்சாரம் இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் தொகையிலிருந்து செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொண்ட கடன் தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும். மொரகஹகந்த, களுகங்கை செயற்திட்டதின் 2021 ஆண்டு நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்திற்காக மேற்கொண்டிருந்த கிரயம் ரூபா 107,941,306,934 தொகையாக காணப்பட்டது. இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி அறிக்கையின் படி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 25 மெகா வொட் மின் வலு நிலையத்தின் மூலம் வருடாந்தம் சராசரி மின் உற்பத்தி 67,549,773 மெகா | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் கிரய நலன் பகுப்பாய்வொன்று மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், இந்த செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மின்வலு நிலையத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் நியாயமான காலப் பகுதியில் தீர்த்துக்கொள்வதற்கு தேவைப்படும் இயலுமை தொடர்பாக கண்டறிய வேண்டும். |

வொட்கள் மற்றும் இலங்கை மின்சார சபையின் கட்டணத்தின் படி அதன் பெறுமதி ரூபா 1,188,898,473 தொகையாக காணப்பட்டது. அதன்படி, மின் உற்பத்தியின் ஒட்டுமொத்த வருமானத்தின் மூலம் செயற்திட்டத்தின் மூலதனக் கிரயத்தை அணவல் செய்வதற்கு எடுக்கும் காலம் 90.9 வருடங்களாக காணப்பட்டது.

**3.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கடைபிடிக்கப்படும் கொடுப்பனவு நடவடிக்கை முறை, நி.பி. 135 இன் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு தொடர்பான கருமங்களை சாட்டுதல் செய்வதனை இணங்கியிருக்காமையால் அந்த நடவடிக்கை முறையை சரி செய்யும் படி 2011 மார்ச் 22 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளருக்கு கட்டளை இடப்பட்டு 12 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் கட்டளையை செயற்படுத்தியிருக்கவில்லை. | இந்த கொடுப்பனவு நடவடிக்கை முறையை சரி செய்வது தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளல் நடைபெறுவதுடன், இறுதியாக 2023.03.15 திகதி அந்த கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்தது. | அரச கணக்குக் குழுவினால் அமைச்சுச் செயலாளருக்கு வழங்கியிருந்த கட்டளை 12 வருடங்களுக்குள் செயற்படுத்தாமைக்குரிய காரணம், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அந்தக் காலப் பகுதியில் ஏற்பட்டிருந்த முறைகேடான பயன்பாடு தொடர்பாக பெறுமதி மதிப்பீடொன்றுடன் அரச கணக்குக் குழுவிற்கு அறிவிக்க வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 428 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான பதவியணி 246 ஆக இருந்தது. அதன்படி, சிரேஷ்ட மட்ட 51 பதவிகள், மூன்றாம் மட்ட 14 பதவிகள், இரண்டாம் மட்ட 55 | இணைக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியில் காணப்படும் வெற்றிடங்களை நிறப்புவதற்காக பொது நிருவாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 352 மிகை பதவியணி | பதவியணி தேவைப்பாடு தொடர்பாக கால ரீதியாக மீளாய்வுக்கு ஆளாக்க வேண்டும். |

பதவிகள் மற்றும் ஆரம்ப மட்ட 62 பதவிகளாக 182 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இரண்டாம் மட்டத்தின் பதவியொன்றில், ஆரம்ப மட்ட 3 பதவிகள், 352 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பதவிகள் மிகைப் பதவியணியொன்று காணப்பட்டது. (அபிவிருத்தி உத்தியோகத்தர்) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் 2023 ஆண்டிற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும்.